# புதுவிதி
PUTHU VITHI


விலை 20/=

பக்கங்கள் 24

12 ஜனவரி 2019

புதுமை : 03 விதி : 136


'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'





வடக்கின் வெள்ளத்தில் தென்னிலங்கை அரசியல்



குடும்பத்துக்கு ஒரு பட்ஜெட்



மனித வேட்டையில் தப்புமா ஒராங்குட்டான்?



தேடும் கண்கள்

# தேடும் கண்கள்



**தேன் சிட்டு - Sunbird**
படம்: குகரூபன்



## காட்டுச் சிலம்பன் (பூணில்)


ஆங்கிலம்: Jungle Babbler
உயிரியல் பெயர்: Turdoides Striata
நீளம் - 12 செ.மீ.
ஆயுள் - 16 வருடங்கள்

பூணில் பறவை பேச்சு வழக்கில் புலுனி என்றும் அழைப்பர். வெண்தலைச் சிலம்பன், காட்டுப் பூணில் என்றும் அழைக்கப்படுகிறது. பெரும்பாலும் ஏழு பறவைகளாக திரியும் என்பதால் ஏழு சகோதரிகள் என்று பொருள்பட ஆங்கிலத்தில் செவன் சிஸ்டர்ஸ் (Seven Sisters) என்றும் அழைப்பர்.

ஆண், பெண் இரண்டு ஒரே தோற்றம் கொண்டவை. தோட்டங்கள், வயல்கள், வனப் பகுதிகள், நகரப் பகுதிகளில் வாழ்கின்றன. இறக்கைகளின் நீளம் குறைவு என்பதால் உயரமாகவோ, வேகமாகவோ இவற்றால் பறக்கமுடியாது. தத்தி தத்திப் பறக்கும் இயல்பு கொண்டவை. அணில்கள் வேறு பறவைகளுடன் இவை சேர்வதில்லை. தங்கள் கூட்டத்துடன் மட்டுமே வாழும் பண்பு கொண்டவை.

இலை, சிறு குச்சிகளால் கூடமைக்கும் தன்மை கொண்டவை. 3 - 7 முட்டைகளை இடும். கொண்டைக் குயில்களும் இவற்றின் கூட்டில் முட்டையிடும். குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிவந்து 2 வருடங்கள் வரை தாயுடன் இருக்கும், பின்னர் தனித்துச் சென்றுவிடும். தங்கள் குழுவுக்குள் ஒன்றையொன்று துரத்தி பொய் சண்டை செய்து விளையாடும். ஒன்றுடன் ஒன்று ஒற்றுமையாக வாழும் தன்மை கொண்டது.


இந்தப் பறவை எதிரியிடம் இருந்து தன்னைப் பாதுகாக்க இறந்துவிட்டது போன்று நடிக்கவும் செய்யுமாம்!



**பேரினக் கம்பளி புழு - Green Caterpillar**
இடம்: கோப்பாய், யாழ்ப்பாணம்.
படம்: ற.சாயிராம்



**அரசவால் ஈ பிடிப்பான் - Indian paradise flycatcher**
இடம்: நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
படம் : செ.ராஜேந்திரா



**கீச்சான் குருவி - Shrikes**
இடம்: மட்டுவில், யாழ்ப்பாணம்
படம் : குகரூபன்

எமது சூழலில் இருந்து பல்லுயிர் தன்மை இன்று அருகிவிட்டது. நாம் காணும் உயிர்களை அடையாளம் காண்பதுகூட இன்று அரிதாகி விட்டது. இவ்வாறான நிலையில் உங்கள் சூழலில் காணும் உயிர்களின் புகைப்படங்களை எமக்கு அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி : puthuvithi@gmail.com



**வக்கடை மடையன் - Yellow bittern**
படம்: க.சுரேந்திரகுமார்



**மயில் - Peocock**
இடம்: கிளிநொச்சி
படம்: க.ஐங்கரன்

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 12 ஜனவரி 2019 விதி : 136




# ஏற்றி வைத்த பதவியும் இறக்கப்பட்ட பதவியும்

ஒக்ரோபர் 26ஆம் திகதி ஜனாதிபதி எடுத்த திடீர் முடிவு காரணமாக ரணிலிலன் பதவி பறிபோக மஹிந்த பிரதமராக்கப்பட்டார். அன்று தொடங்கிய குழப்பங்கள் 52 நாள்கள் மோதல்களும் முரண்பாடுகளுமாகத் தொடர்ந்து இறுதியில் நீதிமன்றத் தீர்ப்பின் முடிவுக்கு வந்தது.

மீண்டும் ரணில் பிரதமரானார்.

ரணில் மீண்டும் பிரதமராவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடளுமன்றத்திலும் நீதிமன்றத்திலும், வெளிநாட்டுத் தூதுவர்கள் மத்தியிலும் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது.

மீண்டும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகிய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் பதவிக்கு ஆபத்து வந்து விட்டது. நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக் கொண்ட எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சுந்திரக் கூட்டமைப்பே இருப்பதால் எதிர்க்கட்சித் தலைவர் பதவி மஹிந்தவுக்கு வழங்கப்படவேண்டும் எனக் கோரப்பட்டது.

அவருக்கு வழங்கக் கூடாது என்பதற்கான சட்டபூர்வமான இரு காரணங்கள் முன்வைக்கப்பட்டபோதும் இறுதியில் சபாநாயகர் கரு ஜெயசூரிய மஹிந்தவே எதிர்க்கட்சித் தலைவர் என முடிவு செய்துவிட்டார்.

ரணிலின் பிரதமர் பதவியையும் ஐ.தே.க. ஆட்சியையும் காப்பாற்றுவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு மூச்சுடன் பாடுபட்டது. அதே ஐக்கிய தேசியக் கட்சி சபாநாயகராலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி பறிக்கப்பட்டுவிட்டது. தமது தேவைகளுக்கு தமிழர் தரப்பை பாவிப்பது, தேவை முடிந்தவின் கழற்றிவிடுவது ஐக்கிய தேசியக் கட்சிக்கு கைவந்த கலை. அது தெரிந்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் பின்னால் இழுபடுவது தமிழரசுக் கட்சியின் பாரம்பரியம்.

**ஆறு கடக்கும் மட்டும் அண்ணன் தம்பி
ஆற்றைக் கடந்த பின் நீ யாரோ நான் யாரோ**

## பெண்களை நாய்களாக்கிய இந்துத்துவ மேலாதிக்கம்

இந்திய உச்ச நீதிமன்றம் சபரிமலையில் ஐய்யப்ப தரிசனம் செய்ய பெண்கள் அனுமதிக்கப்படலாம் என தீர்ப்பு வழங்கிய பின்பு அங்கு இரு பெண்கள் பொலிஸாரின் பாதுகாப்புடன் சென்று வழிபாட்டில் ஈடுபட்டனர். அவர்கள் வழிபாட்டை முடித்து வெளியேறியதும் கோவில் உடனடியாகப் பூட்டப்பட்டது. பின்பு பரிகாரபூஜை செய்த பின்பே ஒரு மணி நேரத்தின் பின் பக்தர்கள் தரிசனத்துக்காகத் திறக்கப்பட்டது.

இந்துக் கோயில்களில் நாய் உட்புகுந்துவிட்டால் சண்டாளப் பிரார்த்தனை அழைக்கப்படும் பரிகார பூஜை மேற்கொள்ளப்பட்ட பின்பே மீண்டும் வழிபாட்டுக்காக கோயில் திறக்கப்படும். இப்போது கோயிலுக்குள் நாய் புகுந்தால் பரிகாரபூஜை செய்வது போல் சபரிமலை ஆலயத்துக்குள் பெண்கள் புகுந்ததால் பரிகார பூஜை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது இந்திய இந்துத்துவ மேலாதிக்கம் பெண்களையும் நாய்களையும் ஒரே தரத்தில் கணித்துள்ளது.

அது மட்டுமன்றி சபரிமலையில் பெண்கள் பிரவேசித்ததை அடுத்து கேரளா எங்கும் கடை அடைப்புகள், ஆர்ப்பாட்டங்கள், வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன. இதுவரை 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 1700 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனினும் கலகங்கள் தொடர்கின்றன. அது மட்டுமன்றி பெண்களின் சமத்துவத்தை வலியுறுத்தி வரும் இடதுசாரிகளின் வீடுகளுக்கு கைக்குண்டு வீச்சுக்களும் இடம்பெற்றுள்ளன.

காந்தி பிறந்த மண்ணில் - இந்திராகாந்தி ஆண்ட மண்ணில் - சோனியா காந்தி அதிகாரம் செலுத்திய மண்ணில் - வெள்ளயரை விரட்டியடித்த வேலு நாச்சியார் களமாடிய மண்ணில் பெண்கள் நாய்களாக மதிக்கப்படும் அவலம் அரங்கேறுகிறது.

**அம்மன் சிலைக்கு மூலஸ்தானத்தில்
ஆறு காலப் பூசை ஆலயத்தில் உயிருடன்
பெண்புகுந்தால் பரிகார பூசை**

## கிழக்கின் ஆளுநரை வரவேற்கும் வடக்கின் அவைத் தலைவர்



முன்னாள் பிரதி அமைச்சரும் மஹிந்த ராஜபக்ஷவின் அதியுயர் விசுவாசியுமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டதை வரவேற்றுள்ளதுடன் தனது மகிழ்ச்சியையும் தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண அவைத்தலைவர் அவர்கள்.

மேலும் அவர் தமிழ் பேசும் ஒருவர் கிழக்கின் ஆளுநராக நியமிக்கபபட்டமை ஒரு நல்ல விடயம் எனவும் ஹிஸ்புல்லா - சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என பேதமில்லாமல் எல்லோரையும் சமமாக மதித்து சேவை செய்வார் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்திருந்தார்.


வடக்கும் கிழக்கும் இணைக்கப்படக்கூடாது என காலம் காலமாக குரல் கொடுத்துவந்தவர் ஹிஸ்புல்லா. அவைத் தலைவர் அவர்கள் தான் ஹிஸ்புல்லாவின் நியமனத்தை வரவேற்றதன் காரணம் ஹிஸ்புல்லா வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்காலத்தில் ஏற்றுக்கொள்வதாக நம்புவதாக அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கு இணைப்புக்கான கோரிக்கையை கைவிடப்போகின்றது என கருதுவதலா என்பது பற்றி எதுவும் கூறவில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூக் ஹக்கீமும் அரசியல் அமைப்பு மூலம் வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டுவிடும் எனக் கூறப்படுவது வெறும் வதந்தி என அடித்துக் கூறிவிட்டார்.

**காகத்தை பாலில் குளிப்பாட்டினாலும்
கறுப்பு நிறம் கறுப்பேதான்**

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்

என் தோல்விக்குப்
பின்னால் நான் மட்டுமே
இருப்பேன்..




என் வெற்றிக்குப் பின்னால்
நான் பட்ட ஆயிரம் வலிகள்
இருக்கும்..!



பழைய பாத்திரங்களுக்கு ஈயம்
பூசும் கடைக்கு புதிய பெயர் தான்


ப்யூட்டி பார்லர்

உங்கள் கண்ணீர் துடைக்க
ஆயிரம் பேர் வருவாங்க...




மூக்கு துடைக்க ஒருத்தனும் வர
மாட்டான் இது குளிர்காலம்..
சளி பிடிக்காம
பார்த்துக்கோங்க...

நாங்கள் சிறுவயதில்
கண்ட சூப்பர் மார்க்கெட்
இது தான்....




கைல நாலணா வச்சிக்கிட்டு
எதை வாங்கலாம்னு
யோசித்து மகிழ்ந்த நாட்கள்

பேருந்தின் கடைசி சீட்டை
போலவே வாழ்க்கை.




திடீர் திடீர்னு
தூக்கியடிச்சுருது..

நல்லவர்களுக்கு மட்டும் துன்பம் ஏன்?




உரசாமல் வைரத்தை பட்டை தீட்ட
முடியாது. நெருப்பிலிடாமல் தங்கத்தை
தூய்மைப்படுத்த முடியாது.
அதுபோல, நல்லவர்கள்
சோதனைக்குள்ளாவார்கள். ஆனால்
வீழ்ந்துவிட மாட்டார்கள்

ரெண்டு பேரு சண்டை
போட்டுக்கிட்டா மூணாவதா
ஒருத்தன் போயி விலக்கி
விடுவான்...




இப்பவெல்லாம் மூணாவது
ஆளு வீடியோ எடுக்குறான்..

இரக்கமும் உறக்கமும்
அளவோடு தான்
இருக்க வேண்டும்



உறக்கம் அதிகரித்தால்
சோம்பேறி என்பர்!
இரக்கம் அதிகரித்தால்
ஏமாளி என்பர்!

எண்ணெயில் சுடும்
வடையை விட... சிலர்
வாயால் சுடும்




வடைகளில்
கொலஸ்டோல் அதிகம்..!

கேப்பக்கூழ் சாப்பிடுவதை
கேவலமாகவும்,
கே.எப்.சி.யில் சாப்பிடுவதை
பெருமையாகவும்
என்றைக்கு நினைத்தோமோ
அன்றே வியாதிகள் எல்லாம்
நமக்கு விருந்தினராகிவிட்டது.

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com

## மக்கள் நம்பிக்கையை காக்க வேண்டும் ஆளுநர்கள்

‘தை பிறந்தால் வழி பிறக்கும்” என்ற நம்பிக்கை கலாதிகாலமாக தமிழர்கள் மத்தியில் உள்ளது. ஆனால் ஈழத் தமிழர்கள் ஒவ்வொரு தையும் அரசியல் தீர்வு என்ற எதிர்பார்ப்புடனே தொடங்குகிறது. ஆனால் அவர்களின் எதிர்பார்ப்பு இதுவரை நிறைவேறவில்லை. ஆனால், நம்பிக்கை குறையாதவர்களாக ஒவ்வொரு தையையும் வரவேற்கிறார்கள்.

2019 தை, சிங்கள ஆதிக்க அரசிடம் நெடுங்காலமாக நிலவிய கருத்துக்கு மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இதே மாகாணங்களைச் சேர்ந்த சிறுபான்மை இனத்தவர்கள் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சிங்களவர்களை மட்டுமே சிறுபான்மை இன மக்கள் அதிகம் வாழும் இந்த மாகாணங்களுக்கு வழக்கமாக நியமிக்கப்பட்ட நிலையில், இந்த நியமனங்கள் மிகப்பெரும் மாற்றம் எனலாம்.

அரசின் நம்பிக்கைப் பிரதிநிதிகளாக - நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிகாரிகளாக பொறுப்பேற்றுள்ள இரு ஆளுநர்கள் முன்பும் மக்கள் பிரச்சினைகள் மலைபோல் குவிந்துள்ளன. கடந்த காலத்தில் ஆளுநர்களாக இருந்தவர்கள் மக்களின் பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வுகளைத் தந்தாலும் அவர்கள் மக்களின் அடிப்படை – முக்கிய பிரச்சினைகளைத் தீர்க்கவோ, வடக்கு – கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி குறித்து அக்கறைப்படவோ இல்லை. மேலும் இவர்கள் தமிழ் மக்களின் பண்பாட்டையோ கலாசாரத்தையோ புரிந்துகொள்ளமல் - தங்கள் பாணியிலேயே நிர்வாகத்தைக் கையாண்டனர்.

அரசின் நம்பிக்கையை சம்பாதிப்பதற்காக அவர்கள், வடக்கு மாகாண சபைக்கு கொடுத்த அழுத்தங்கள், தொல்லைகள் ஏராளம். வழக்கமான ஆளுநர்களின் செயற்பாடுகளால் ஏற்பட்ட குழப்பங்கள் ஏராளம். அவற்றை எல்லாம் சரிப்படுத்த வேண்டிய பொறுப்பு இரு ஆளுநர்களுக்கும் உண்டு. அதைத் தாண்டி இங்குள்ள அதிகாரிகளின் அசமந்தப் போக்கையும் - வடக்கு, கிழக்கில் வேகமாக - ஆழமாகப் பரவும் சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பும் இப்போது இருவர் மீதுமே உண்டு.

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்த்து - மாகாணங்களின் அபிவிருத்தியை மேலும் முன்னேற்ற வேண்டிய கடப்பாடும் ஆளுநர்கள் வசமே உள்ளது. தை மாதத்தில் பொறுப்பேற்றுக் கொண்ட இரு ஆளுநர்கள் மீதும் - சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால் பெரும் நம்பிக்கையைத் தமிழ் பேசும் மக்கள் வைத்துள்ளனர். மக்களின் நம்பிக்கையை இரு ஆளுநர்களும் காக்க வேண்டும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!

# புராணத்தில் தைப்பொங்கல்

பொங்கல் என்பது பழமை வாய்ந்த பண்டிகையாகும் குறிப்பாகத் தமிழர்கள் கொண்டாடும் பண்டிகையாகவே கனாணப்படுகிறது. இந்த பண்டிகையின் வரலாற்றைப் பார்க்க வேண்டுமானால் நாம் சங்க காலமான கி.மு. 200 - கி.மு. 300 நோக்கி செல்ல வேண்டும். பொங்கல் என்பது சமஸ்கிருத புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதை போல் திராவிட அறுவடை பண்டிகையாக அறியப்பட்டாலும் கூட, வரலாற்று அறிஞர்கள் இந்தப் பண்டிகையைச் சங்க காலத்தின் போது கொண்டாடப்பட்ட தை நீராடல் என நம்புகின்றனர். இப்போது சங்க கால பொங்கல் பற்றியும், பொங்கல் பண்டிகை பற்றிய புராணக்கதைகளையும், பொங்கல் கொண்டாட்டங்கள் பற்றியும் பார்ப்போம்.



சங்க காலத்தின் போது நடந்த கொண்டாட்டங்கள் தான் இன்றைய பொங்கல் கொண்டாட்டமாக மாறியுள்ளது. கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, தை நீராடலின் போது சங்க காலப் பெண்கள் “பாவை நோன்பு” என்ற விரதத்தைக் கடைப்பிடித்து வந்தனர். பல்லவர்களின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 400-கி.பி.800) இது மிகவும் முக்கியமான பண்டிகையாக விளங்கியது. தமிழ் மாதமான மார்கழியின் (டிசம்பர் – ஜனவரி) போது இது கொண்டாடப்பட்டது. இந்த பண்டிகையின் போது நாட்டில் மழையும் வளமும் செழிக்க வேண்டி இளம் பெண்கள் வேண்டுவார்கள்.

இந்த மாதம் முழுவதும் பால் மற்றும் பால் பொருட்களைத் தவிர்ப்பார்கள். தங்கள் முடிக்கு எண்ணெயிட்டு கொள்ள மாட்டார்கள். மேலும் பேசும் போது கடுமையான சொல்லை பயன்படுத்த மாட்டார்கள். பெண்கள் அனைவரும் விடியற்காலையில் குளித்து விடுவார்கள். ஈர மண்ணில் செய்யப்பட்ட கட்யாயணி என்ற பெண் தெய்வத்தின் சிலையை அவர்கள் வணங்கி வந்தார்கள். தை மாதத்தின் (ஜனவரி – பிப்ரவரி) முதல் நாள் தங்கள் நோன்பை முடித்துக் கொள்வார்கள். நெற்பயிர்கள் செழிப்பதற்காக அளவுக்கு அதிகமான மழையைக் கொண்டு வருவதற்காகவே இந்த நோன்பு. பழமை வாய்ந்த இந்த மரபுகளும், சடங்குகளும் தான் பொங்கல் கொண்டாட்டங்களுக்கு பிள்ளையார் சுழி போட்டது.

திருப்பாவை மற்றும் திருவெம்பாவை தை நீராடல் பண்டிகை பற்றியும், பாவை நோன்பின் போது கடைப்பிடிக்கப்படும் சடங்குகள் பற்றியும், ஆண்டாளின் திருப்பாவை மற்றும் மாணிக்கவாசகரின் திருவெம்பாவை ஆகியவற்றில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. குலோத்துங்கன் என்ற சோழ அரசன் கோவில்களுக்கு நிலத்தை பரிசாக அளிப்பார். அதிலும் குறிப்பாகப் பொங்கல் பண்டிகையின் போது என திருவள்ளூர் – வீரராகவா கோவிலில் உள்ள கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொங்கல் பண்டிகையுடன் சில புராணக்கதைகளும் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. பொங்கல் பற்றிய புகழ் பெற்ற இரண்டு வரலாற்றுக் கதைகள் வழக்கில் உண்டு. – ஒன்று சிவபெருமானுடன் தொடர்புடையது, மற்றொன்று இந்திர தேவனுடன் தொடர்புடையது.

சிவபெருமான் மற்றும் நந்தி புராணத்தின் படி, ஒரு முறை நந்தியிடம் பூமிக்கு செல்லுமாறும், அங்கே மனிதர்களிடம் தினமும் எண்ணெய் முழுக்குச் செய்து குளித்து, மாதம் ஒரு முறை மட்டுமே உண்ணுமாறு கூறச் சொன்னார் சிவபெருமான். ஆனால் நந்தியோ, தவறுதலாக, தினமும் உண்ணவும் மாதமொருமுறை எண்ணெய் தேய்த்து குளிக்கவும் அனைவரிடமும் கூறி விட்டது. இதனால் கோபம் கொண்ட சிவபெருமான் நந்திக்கு சாபமிட்டார். அதனை என்றுமே பூமியில் வாழுமாறு கூறினார். அதிகமான உணவை தயாரிக்க மனிதர்களுக்கு உதவியாக நிலத்தை உழ வேண்டும் என கூறினார். அதனால் தான் இந்த நாளில் மாட்டிற்கு தொடர்புண்டு.

கிருஷ்ணர் மற்றும் இந்திர தேவன் இந்திர தேவன் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணர் சம்பந்தப்பட்ட மற்றொரு புராணத்தாலும் பொங்கல் கொண்டாடப்படுகிறது. அனைத்துக் கடவுள்களுக்கும் அரசனானதால் மிகவும் கர்வத்துடன் இருந்து வந்த இந்திர தேவனுக்குப் பாடம் புகட்ட எண்ணினார் குழந்தைப் பருவத்தில் இருந்த கிருஷ்ணர். ஆடு மேய்ப்பவர்கள் அனைவரும் இனி இந்திர தேவனை வணங்க வேண்டாம் எனக் கூறினார். இதனால் கோபம் கொண்ட இந்திர தேவன், புயல் மழையை உண்டாக்க மேகங்களை பூமிக்கு அனுப்பினார். மழையும் 3 நாட்களுக்கு தொடர்ந்தது. கிருஷ்ணரோ மனிதன் இனத்தை பாதுகாக்க கோவர்த்தன மலையை கையில் தூக்கிச் சுமந்து கொண்டார். பின் தன் தவறையும், கிருஷ்ணரின் தெய்வீக சக்தியையும் உணர்ந்தார் இந்திர பகவான்.

பொங்கல் கொண்டாட்டங்கள் இந்து புராணங்களின் படி, 6 மாதங்களாக நிலவி வரும் நீண்ட இரவுகளுக்கு பிறகு வரும் கடவுள்களின் தினம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.. மூன்று நாட்களுக்கு நீடிக்கும் இந்த பண்டிகை, தமிழர்களால் கொண்டாடப்படும் மிக முக்கியமான மற்றும் உருக்கமான அறுவடைத் திருவிழாவாகும். பொங்கல் தினத்தன்று நெற்கதிர்களை அறுப்பதற்கு முன்பு கடவுளுக்கு விசேஷ பூஜை நடத்தப்படும். தங்களின் ஏர் கலப்பை மற்றும் நெல் அறுக்கும் அரிவாள்கள், சந்தன குப்பி ஆகியவற்றை வைத்து சூரியனையும், பூமியையும் விவசாயிகள் வணங்கிடுவார்கள். கடவுள் முன் வணங்கப்பட்ட கருவிகளை கொண்டு தான் நெற்கதிர்களை அறுவடை செய்வார்கள்.

நான்கு நாள் பண்டிகை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பண்டிகை கொண்டாடப்படுகிறது. முதல் நாளான போகிப் பொங்கல், குடும்பத்திற்கானது. இரண்டாம் நாளான சூரியப் பொங்கல் சூரிய பகவானை வழிபடுவதற்கான நாளாகும். மூன்றாம் நாளான மாட்டுப் பொங்கல், மாடுகளை வழிபடுவதற்கான நாளாகும். இந்த நாளில் மாடுகளை குளிப்பாட்டி, கொம்புகளுக்கு அடர்த்தியான வர்ணம் பூசி அதன் கழுத்தை சுற்றி மாலையிடப்படும். கடவுளுக்கு படைத்த பின், அந்த பொங்கல் கால்நடை விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் உண்ணுவதற்கு வழங்கப்படும்.

# வடக்கின் வெள்ளத்தில் தென்னிலங்கை அரசியல்

■ யோகநாராயணன்


அண்மையில் வடக்கில் இடம்பெற்ற வெள்ளம் காரணமாக எமது மக்கள் பேரழிவுக்கு முகம்கொடுக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டது. இடம்பெயர்வு, சொத்திழப்பு, போன்ற துன்ப துயரங்களுக்கு ஆட்படவேண்டி நிலை ஏற்பட்டிருந்தது. அதிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களே இவ்வெள்ளப்பெருக்கு காரணமாகப் படுமோசமான நிலையில் பாதிக்கப்பட்டன.

இவ்வாறு மக்கள் தாளமுடியாத துன்ப துயரங்களுக்கு ஆளாகி அல்லல்பட்டுக் கொண்டிருந்த வேளையில் இந்த அவலநிலையை சிலர் தமது நோக்கங்களுக்காகச் சாதாகமாக முறையில் பாவிக்க முயன்ற கேவலமான போக்கையும் காணக்கூடியதாகயிருந்தது.

இரணமடுக்குளம் பெருக்கெடுத்தமைக்கான காரணங்களைக் கண்டறிய வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே அவர்களால் சில நிபுணர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அதில் முக்கியமான உறுப்பினர் ஒருவர் ஏற்கனவே நீர்ப்பாசன இலாகாவின் பொறுப்பற்ற நடவடிக்கையாலெயே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதாகக் கருத்து வெளியிட்டிருந்தார். அதவேளையில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வர்களும் தனது பங்குக்கு வெள்ளப்பெருக்குக்கு அரசியலே காரணம் எனத் திருவாய் மலர்ந்திருந்தார்.

இவை பாதிக்கப்பட்ட பிரதேசங்களையோ, பாதிப்புக் களையோ சரியாகத் தெரியாமல் 40 மைல்களுக்கு அப்பாவிலிருந்து வெளியிடப்பட்ட கருத்துக ளாகும். அடிப்படையில் இரணைமடுக்குளம் வான்பாய்ந்தமையால் பன்னங்கண்டி, பெரியகுளம், முரசுமோட்டையின் ஒரு பகுதி, கண்டாவளை ஆகிய இடங்களே பாதிக்கப்பட்டன. ஏனைய பாதிக்கப்பட்ட இடங்களான பொன்நகர், அறிவியல் நகர், பாரதிபுரம், கல்லாறு, பிரமந்தனாறு, தருமபுரம் போன்ற பகுதிகளுக்கும் இரணைமடுவுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை. எனவே கிளிநொச்சி மாவட்டத்தின் வெள்ளப்பெருக்கு ஒட்டுமொத்தமாக இரணைமடுவை மட்டும் குற்றம் சுமத்துவது பொருத்தமற்றதும் உள்நோக்கம் கொண்டதுமாகும். எனினும் ஆளுநரால் நியமிக்கப்பட்ட குழுவை அவரே இடைநிறுத்திவிட்டார்.

இன்னொருபுறம் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் வழங்கி அவர்கள் இவ்வெள்ளப் பெருக்கு பற்றி கருத்து வெளியிடுகையில் தாங்கள் இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீர் கொண்டு செல்லவிருந்ததாகவும் அதற்கு சிலர் எதிர்ப்பு



வெளியிட்டதாகவும் அதனால் ஆசிய அபிவிருத்தி வ்ழங்கி வழங்கும் நிதி திரும்பிப் போய் விடுமெனவும் கருத்து வெளியிட்டிருந்தார்.

அவர்கள் அனைவரும் தெரிவிக்கும் கருததுக்களின் பின்னால் இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீர் கொண்டுசெல்லப்பட்டிருந்தால் வெள்ளப்பெருக்கைத் தவிர்த்திருக்க முடியுமென்பதும் அரசியல் நோக்கத்துக்காகவே அது தடுக்கப்பட்டது என்பதும் மறைந்து கிடப்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

இரணைமடுக் குளத்தின் கொள்ளளவை விட மூன்று மடங்கு நீர் வெள்ளப் பெருக்கின் போது வெளியேறிக் கடலில் சேர்ந்துள்ளதாகச் சில கணக்கெடுப்புகள் தெரிவிக்கும் நிலையில் யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர் விநியோகத்தை முடிச்சுப்போடுவது அப்பட்டமாக நயவஞ்சக நோக்கம் கொண்டது என்பதை மறுத்துவிட முடியாது.

1958 ஆண்டில் கிளிநொச்சியில் ஒரு பெரு வெள்ளப் ஏற்பட்டு இரணைமடுக்குளம் உடைப்பெடுத்தது. அதன் காரணமாக முரசுமோட்டை, பரந்தன், கண்டாவளை போன்ற பகுதிகள் முற்றாகவே மூழ்கிப் பேரழிவை ஏற்படுத்தின. அப்போது கிளிநொச்சி, கரடிப்போக்கில் கூட ஐந்து அடி உயரத்துக்கு நீர்பாய்ந்ததாகவும் கேள்விப்படக்கூடியதாக உள்ளது.

அதையடுத்து ஆறுமுகம் என்ற நீர்ப்பாசனப் பணிப்பாளரால் ஆறுமுகம் திட்டம் என்ற பேரில் இரணைமடுவில் இருந்து வெளியேறும் மேலதிக நீரை ஆனையிறவு நீரேரியில் தேக்கி வடக்கே அனுப்புவது எனத் திட்டமிடப்பட்டது. அதன் அடிப்படையில் ஆனையிறவில் ஏ9 வீதியில் போடப்பட்டிருந்த இரும்புப்பாலம் அகற்றப்பட்டு அது மூடப்பட்டு உப்பளத்தின் உப்பு நீர் வீதியில் கிழக்குப் பக்கம் வாராமல் தடுக்கப்பட்டது. சுண்டிக்குளத்தில் மழை காலத்தில் கடல் நீர் ஆனையிறவு நீரேரியில் புகுந்துவிடாமல் இருப்பதற்காக அணையொன்று கட்டும் முகமாக கற்களும் பறிக்கப்பட்டன. மாவிலங்கை என்ற இடத்தில் ஓர் ஆழமான, அகலமான கால்வாய் வெட்டப்பட்டு ஆனையிறவு நீரேரி, தொண்டமானாறு நீரேரியுடன் மருதங்கேணியில் இணைக்கப்பட்டது. தொண்டமானாறு நீரேரியில் கடல் நீர் கலக்கப்படுவதைத் தடுக்க செல்வச்சந்நிதி கோவிலின் பின்னால் அணையொன்று கட்டப்பட்டதுடன் கரணவாய் உப்பளமும் அகற்றப்பட்டது.

ஆனால் அது நிறைவேறு முன்பே நிறுத்தப்பட்டுவிட்டது. 1965 தொடக்கம் ஆட்சியில் பங்கு கொண்டிருந்த தமிழரசுக் கட்சியும் அதை நடைமுறைப்படுத்த முயலவில்லை.

அத்திட்டம் மட்டும் நிறைவேற்றப்பட்டிருந்தால் வடபகுதி நிலத்தடி நீர் உப்பாவதைத் தடுத்திருக்க முடியும் என்பதுடன் வடக்குக்கும் போதிய நீரையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கும்.


இன்று யாழ்ப்பாண மக்களின் குடிதண்ணீருக்காகக் குரல் கொடுக்கும் எவரும் இத்திட்டம் பற்றி அக்கறை காட்டுவதில்லை. மாறாக கிளிநொச்சி விவசாயத்தை அழித்து இரணைமடு நீரைக் கொண்டு போக கிடைக்கக்கூடிய அத்தனை சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த முயற்சியானது இரணைமடுவை மாகாவலி அதிகார சபையின் கீழ் கொண்டு வந்து கிளிநொச்சியில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கும் தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்குத் துணைபோகும் நோக்கம் கொண்டது என்பதில் சந்தேகப்பட எதுவுமில்லை.

இவ்வாறு தென்னிலங்கை அரசியல்வாதிகளின் உத்தியோகபற்றற்ற முகவர்கள் தமிழ்மக்களின் பொருளாதார அடிப்படையையே தகர்க்கும் சதி வேலைகளை முன்னெடுக்கும் நிலையில் வெள்ளப் பெருக்கைக் காட்டி தென்னிலங்கை அரசியவல்வாதிகள் நேரடியாகவே வடக்கில் களமிறங்கிவிட்டனர்.

முதலில் இறங்கியவர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ. அவர் பாரதிபுரம், பன்னங்கட்டி, கல்லாறு ஆகிய இடங்களில் தங்கிய இந்த இடம்பெயர்ந்த மக்களைச் சந்தித்துத் தன் கவலையை தெரிவித்ததுடன் நிவாரணப் பொருள்களையும் வழங்கியிருந்தார். போரின்போது அவரது தந்தையாரின் படைகள் வீசிய கொத்துக் குண்டில் 41 பொதுமக்கள் பலி கொள்ளப்பட்ட இடம் அவர் சென்ற கல்லாறு என்பதை அவர் தெரிந்திருந்தாலும் வெளிக்காட்டியிருக்கமாட்டர்.

(19ஆம் பக்கம் பார்க்க)



# வடக்கு ஆளுநருக்கு பகிரங்கக் கடிதம்

கலாநிதி சுரேன் ராகவன்,
ஆளுநர், வடக்கு மாகாணம்,

ஐயா
வணக்கம்.

புதிதாக ஓர் ஆளுநர் வருகிறார் என்று கேள்விப்பட்டதும், இதுவரை எமக்குக்கிட்டிய அரசியல் அனுபவங்களிலிருந்து உங்களை மனக் கண்ணால் பார்க்க நேரிட்ட போது... நீங்களும் இங்கு வந்து ஆளுநருக்குரிய நாற்காலியிலமர்ந்து கடந்த காலத்தில் செயற்பட்டவர்கள் போலத்தான் செயற்படுவீர்களோ என்ற பயம் என்னைத் தொட்டுக் கொண்டது. அதனால்தான், தங்களைக் காண வேண்டும் என்று பதவியேற்பு விழாவுக்கு ஓடி வந்தேன். ஒரு தமிழனாக உங்களால் எனது மனக் கிலேசத்தை அறியவும், உணரவும் முடியும் என்பதற்காகத்தான் அதை வெளிப்படையாக இங்கு எழுத முனைகிறேன். இதில் தவறு ஏதேனும் காணப்பட்டால் மன்னிக்கும்படி தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கரடு முரடான பாதைகளைக் கடந்து வந்த, துன்பங்களையே பல ஆண்டுகளாகத் தனது வரலாறாகக் கொண்ட ஒரு வட பகுதி வாழ் சிறிய புழு, பூச்சியினால் கூட இப்படித்தான் எண்ண முடியும். ஒரு அரசின் முகவராக வருபவர், அவர்கள் தெரிவாக இருப்பவர் அவர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்பவராக மட்டுமே இருப்பார் என்ற எண்ணத்தை உங்கள் முதல் நாள் பேச்சுத் தகர்த்தெறிந்திருக்கிறது. உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடமைகளிலிருந்து வழுவாது காரியங்களைத் தர்மத்தோடு செய்ய வேண்டும் என்று தங்களிடம் இருக்கின்ற அந்த மனோபாவத்தையும், தர்மத்தையும், நேர்மையையும் நான் வெளிப்படையாகப் பாராட்டுகிறேன். அதற்காகத் தாங்கள் பதவியேற்க முன்பு ஒரு சாதாரண மனிதனதாக வந்து வட மாகாணத்தின் நிர்வாக சேவையின் அனுபவங்களைப் பெற்றுச் சென்ற பின் இந்தப் பதவியைப் பெற்று வந்திருப்பதே அதற்குச் சான்று என்று நான் எண்ணுகிறேன். தரப்பட்ட பணியைத் தருமம் தவறாது முன்னெடுக்க வேண்டும். என்ற அத்தகையதொரு சமூக அக்கறையே அங்ஙனம் தங்களைச் செய்யத் தூண்டியிருக்கிறது.

ஒரு கல்விமான் என்ற முறையில் உங்கள் பதவியேற்பின்போது அங்கு வாழ்த்துத் தெரிவித்துப் பேசியவர்கள் பேச்சிலிருந்து தற்போது வட பகுதியில் உள்ள நிலைமைகளையும், மனித முரண் பாடுகளையும், கட்சி பேதங்களை யும் உங்களால் அளவிட முடிந் திருக்கும் என்று எண்ணுகிறேன். அங்கு சமுகமளித்திருந்த அரசியல் பிரமுகர்களும் சரி அதிகாரிகளும் சரி வட பகுதி மக்களின் பிரதிநிதிகளாகவும், கடமை உணர்வோடுமா வந்திருப்பார்கள் என்று எண்ணுகிறீர்கள்? தங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்தக் கிடைத்த சந்தர்ப்பமாகவே அதை அவர்கள் பயன்படுத்தி இருப்பார்கள் என்றதாகத்தான் என்னால் பார்க்க முடிகிறது.

அவர்கள் வாழ்த்துத் தெரிவிக்க வந்த வேகத்தைப்போல காரியாலயப் பணிகளின் வேகமும், அதில் உங்களுக்கான ஒத்துழைப்பும் இருக்கும் என்று நான் ஒரு போதும் எண்ணவில்லை. ஏனெனில் "ஊழல் நிறைந்ததொரு மாகாணமாக வட மாகாணத்தைக் கட்டியெழுப்புவதே எனது நோக்கம்" என்று நீங்கள் குறிப்பிட்டபோது அங்கிருந்த சிலருக்கு அது நகைச்சுவையாக இருந்தது என்றதை அவர்கள் வரட்டுத்தனமான சிரிப்பிலிருந்தும் முணுமுணுப்பிலிருந்தும் என்னால் அறியமுடிந்தது. அத்துடன் தங்கள் கன்னிப்பேச்சு ஒரு அதிகாரத் தொனியில் அமைந்திருந்ததையும் அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை என்பதையும் அவதானிக்க முடிந்தது.

அது அவர்கள் குற்றமல்ல. அவர்களில் தவறிருப்பதாக நான் எண்ணவில்லை. யுத்தத்திற்குப் பின்னலான இங்குள்ள கட்டமைப்பு அப்படித்தான் நடைமுறையில் இருக்கிறது. எல்லா நிலைகளிலும் "தடி எடுத்தவன் தண்டல்காரன்" என்ற நிலையே இங்கு காணப்படுகிறது. அதிகாரத்தில் தன் தன் மட்டத்தில் ஒவ்வொருவரும் தனிக்காட்டு ராஜாவாகவே வாழ்ந்து வருகிறார்கள். மேலதிகாரிகளாலும் அவர்களைக் கட்டுப்படுத்தக் கூடிய நடைமுறை இங்கு இல்லை. தாங்கள் குறிப்பிட்டதைப்போல தங்கள் சாரதியின் ஓ.ரி செயற்பாடுகளைப் போலத்தான் எல்லாவித செயற்பாடுகளும் காணப்படுகிறது. "நான் செய்வதை நீ கண்டு கொள்ளக் கூடாது. அதே போல நீ செய்வதையும் நானும் கண்டு கொள்ள மாட்டேன்" என்ற நிலைப்பாடே இங்கு அதிகம் உண்டு.

ஐயா!
நீங்கள் கொண்டுள்ள மும்மொழிப் புலமைகளே இந்த நிர்வாகத்தைச் செம்மைபடச் செய்யப் பேருதவியாக இருக்கும் என்பது எனது கருத்து. ஏனெனில் இதுவரை இருந்தவர்கள் தமிழ் மக்களோடு ஒரு மொழிபெயர்பினூடாகவே பேசிக் கொண்டிருந்தனர். தமிழ் மக்களது தேவைகளும், துயரங்களும், ஆதங்கங்களும் அவர்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பினூடாகவே சொல்லப்பட்டது. தமிழர்களை அறிய அவர்களுக்கு மொழி ஒரு தடையாகவே காணப்பட்டது. அதைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு செயற்பட்டவர்கள் பலர். அந்தவகையில் திருப்தி படக்கூடிய விடயமாக தங்கள் மொழிப் புலமை இருப்பதையிட்டு நாம் மகிழ்சியடைகிறோம்.

அதைவிடத் தங்கள் பணிகள் ஆரோக்கியமாகவும், அர்ப்பணிப்போடும் நடைபெற வேண்டுமாயின் ஒரு தலைப்பட்சமாகவும், தமக்குச் சாதகமாகவும் எண்ணுகின்ற அரசியல்வாதிகளோடு அவதானமாக இருப்பதோடு அவர்கள் ஆலோசனைகளுடனும், வழிகாட்டுதலையும் பெறுவதோடு நின்றுவிடாது பொது மக்கள் சந்திப்பையும் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். ஏனெனில் வட பகுதியில் காணப்படும் அடி மட்ட மக்களின் உண்மையான பிரச்சினைகளும் தேவைகளும் அவர்களைப் பிரநிதித்துவப் படுத்துகின்ற அரசியல்வாதிகளுக் கூடாகவோ அல்லது அவர்களைப் பரிபாலனம் செய்கின்ற அதிகார வார்க்கத்திற்கூடாகவோ வெளிக் கொண்டுவரப்படுவதில்லை. அதிகாரவர்க்கத்தின் செயற்பாடுகள் எல்லாம் பெரும்பாலும் கோவைகளுக்குள் முடக்கப்பட்டுவிடுகின்றன. அவர்கள் தங்கள் மேலிடங்களைச் சமாளிக்கக் கூடிய வகையில் தமது கோவைக் குறிப்புகளைச் செம்மைப்படுத்துவதோடு மக்கள் தேவைகள் சரியாக்கப்பட்டு விடுகின்றன. ஒரு போதும் மக்கள் தேவைகள் முற்றாகச் செம்மைப்படுத்தப்படுவதில்லை.

இதையே இதுவரை வட பகுதி முதல்வராக இருந்தவருக்கும் சொல்லி வந்தோம். அவர் தனக்கு நல்லவராக இருந்தாரே ஒழிய மக்களுக்கு நல்லவராக இருந்தார் என்று சொல்வதற்கில்லை. அவர் தனது பணியைச் செம்மைபடச் செய்யாது சென்றதற்கு அவரிடம் காணப்பட்ட அனுபவப் பற்றாக் குறையையும் ஒரு காரணமாகச் சொல்லலாம். அரச திணைக்களங்களுக்கான திடீர் பயணங்களை அவர் மேற்கொண்டது கிடையாது. மேலதிகாரிகளைச் சந்தித்ததைப் போல அவர்களுக்குக் கீழ் உள்ளவர்களது குறை நிறைகளையும் கேட்டதுமில்லை. மக்கள் குறை நிறைகளைக் கேட்டறிந்து உடனடியாக அவர்களுக்குரிய பதில் சொல்வதைத் தவிர்த்து எப்பொழுதும் எழுத்து மூலமான செயற்பாடுகளை மேற்கொண்டார். இது அவர் தன்னைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கையாகவே கொண்டிருந்தார் என்ற குற்றச் சாட்டும் மக்களிடையே உண்டு.

அவர் எப்பொழுதும் முதலமைச்சராக இருக்க வேண்டிய இடத்தில் ஒரு நீதிபதியாக இருந்தே தனது பணிகளை முன்னெடுத்தவர். தனக்குக் கீழ் பணியாற்றிய அமைச்சர்கள், அதிகாரிகள், பணியாளர்கள் எல்லோரையும் அவர் அளவுக்கு அதிகமாக நம்பினார். அந்த நம்பிக்கையைத் தமக்குச் சாதாகமாகக் கொண்டவர்களால் பல ஊழல்களும், மோசடிகளும் முன்னெடுக்கப்பட்டன. அத்தகைய மோசடிகளுக்கும், அதிகாரத் துஷ்பிரயோகங்களுக் கும் விடைபெற்றுத்தராது அவர் சென்றுவிட்டார். இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் ஒரு வட மாகாண முதலமைச்சருக்கு ஒப்பான பணிகளையே தாங்கள் மேற் கொள்ளப் போகிறீர்கள். வடக்கில் பல அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அதே நேரத்தில் மக்கள் குறைகளையும் நீங்கள் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். இப் பெரும் பொறுப்பைத் தங்கள் தலைமேல் சுமத்துவதாக எண்ண வேண்டாம். தங்கள் கன்னிப் பேச்சில் கொண்ட அதீத நம்பிக்கையே எம்மை இப்படி எழுதத் தூண்டியிருக்கிறது.

வட மாகாணத்தில் தங்கள் பணிகள்தொடர வாழ்த்துக்கள்.

இங்ஙனம்
வடபகுதியான்.




## தூக்கம் கண்களை தழுவட்டும்...!

நிம்மதியான உறக்கம்தான் அடுத்த நாள் நம் இயக்கத்துக்கான உந்துசக்தி. அதற்கு உதவுபவை, தூக்கத்தைக் கெடுப்பவை என்னென்ன என்று பார்க்கலாம்.

1. அடுத்த நாள் செய்யவேண்டிய பணிகளை உறங்குவதற்கு முன்னர் ஒரு தாளில் எழுதி வையுங்கள். இது 15 நிமிடங்கள் கூடுதலான தூக்கத்தைக் கொடுக்கும்.

2. தேநீர், கோப்பியில் உள்ள கஃபைன், தூக்கத்தைக் கெடுத்து, விழிப்புநிலையை அதிகரிக்கும். பதிலாகப் பால் பருகலாம்.

3. கைபேசி சத்தம் உறக்கத்தைப் பாதிக்கும். அதை அணைத்து விட்டு அல்லது 'சைலன்ட்'டில் போட்டுவிட்டால் ஆழ்ந்த உறக்கம் நிச்சயம்.

4. உடல் உழைப்பு, உடற்பயிற்சி இரண்டுமே நிம்மதியான தூக்கத்துக்கு நெருங்கிய உறவினர்கள்.

5. புகைபிடிப்பவர்களுக்கு தூக்கமின்மைக் குறைபாடான 'இன்சோம்னியா' பாதிக்க 30 வீத வாய்ப்பு உள்ளது.

# நடப்போமா...?

உடலுக்கு மட்டுமல்ல மனதுக்கும் நன்மையளிப்பது நடைப்பயிற்சி. நடக்கும் நிமிடங்களில் உடலில் ஏற்படும் மாற்றங்களைப் பார்ப்போம்.

**2 நிமிடம் :** உடலில் சேரும் கொழுப்பு, காபோஹைதரேட்டை உடைக்கும் ஜீன்கள் தூண்டப் படும். உடல் எடை குறைய ஆரம்பிக்கிறது.

**3 நிமிடம் :** மதிய உணவின் பின்னான 3 நிமிட நடை இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும்.



**5 நிமிடம் :** பரபரப்பான வேலை களுக்கு சிறு இடைவெளிவிட்டு பூங்கா போன்ற இயற்கை இடங்களில் 5 நிமிடம் நடப்பதால் தன்னம்பிக்கை 40%, மனநிலை 54% மேம்படும்.

**6 நிமிடம் :** தினமும் சுறுசுறுப் பாக 6 நிமிடம் நடப்பதால் நினைவாற்றல் அதிகரிக்கும். சூழ்நிலைக்கேற்ப செயற்படும் திறன் சிறக்கும்

**10 நிமிடம் :** தினமும் 10 நிமிடம் நடப்பதால் பிரச்சினைகளை சமாளிக்கும் திறன் 60% மேம்படும்.

**15 நிமிடம் :** மதிய உணவின் பின் தினமும் 15 நிமிடம் நடந்தால் சீனியின் அளவு குறையும். நீரிழிவு வருவதற்கான வாய்ப்பும் குறையும்.

**20 நிமிடம் :** எலும்பின் அடர்த்தி அதிகரிக்கும். மெனோபஸ் நிலையை அடைந்த பெண்களுக்கு 20 நிமிட நடை அவசியம்.

**30 நிமிடம் :** மன அழுத்தத்தில் இருந்து விடுபடலாம்.

**40 நிமிடம் :** வயதானவர் களுக்கு இதயநோய் ஏற்படும் வாய்ப்பை 50% குறைக்கும்.

**45 நிமிடம் :** தொடை, இடுப் பில் சேரும் கொழுப்பு குறையும்.


**90 நிமிடம் :** இயற்கைசூழ லில் ஒன்றரை மணி நேரம் நடந்தால் எதிர்மறை எண்ணங்கள் மனதை ஆக்கிரமிக்காது. மனநலம் பாதிக்கும் வாய்ப்பு கணிசமாகக் குறையும்.

**4 மணிநேரம்:** வாரத்தில் 4 மணித்தி யாலம் நடக்கும் ஆண் களுக்கு இடுப்பு எலும்பு முறிவு ஏற்படும் வாய்ப்பு 43% குறையும்.

7 1/2 மணி நேரம்: வாரத்தில் ஏழரை மணி நேரம் நடப்பதால் ஆயுள் நான்கரை ஆண்டுகள் அதிகரிக்கும்

# உணவே மருந்து

## செவ்வாழைப் பழம்



மஞ்சள் வாழைப்பழத்தைவிட அதிக ஆற்றல் கொண்டது. அந்தோசினின் (Anthocyanin) நிறமியைக் கொண்டிருப்ப தால், சிவப்பு நிறத்தில் இருக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும்.

காலை உணவு சாப்பிட நேரமில்லாதவர்கள், பாடசாலை செல்லும் பிள்ளைகள் செவ்வாழைப்பழத்தைச் சாப்பிட்டால் சோம்பல், மந்தம் நீங்கும். மூளை சுறுசுறுப்பாக இயங்க உதவும்.

செவ்வாழைப்பழம் விளையாட்டு வீரர்களுக்கு ஆற்றலையும் சுறுசுறுப்பையும் தரும். இதனால்தான், விளையாட்டு வீரர்கள் இடைவேளையின்போது சிவப்பு வாழைப்பழங்களை உண்கிறார்கள்.


சிவப்பு வாழைப்பழத்தில், 'பீட்டா கரோட்டின்' (Beta-carotene) எனும் ஒரேஞ் நிறமியும் இருக்கிறது. இது, விற்றமின் ஏ உற்பத்திக்கு உதவுகிறது. கொழுப்பில் கரையக்கூடிய விற்றமின் ஏ நிறைந்திருப்பதால், கண்களின் ஆரோக்கியத்துக்கு நல்லது.

நார்ச்சத்து நிறைந்த செவ்வாழைப்பழத்தை மலச்சிக்கல், அஜீரணம், வாயுத் தொல்லை போன்ற குடல் பிரச்சினைகள் உள்ளவர்கள் சாப்பிட்டால் அவற்றின் தீவிரம் குறையும்.

செவ்வாழைப்பழம் விற்றமின் பி 6 நிறைந்தது. இது, இரத்தச் சிவப்பு அணுக்களும் ஹீமோகுளோபினும் உருவாக மிக அவசியமானது. இரத்தச்சோகை நோயால் பாதிக்கப்பட்ட வர்கள், ஹீமோகுளோபின் அளவை மேம்படுத்த இப்பழத்தைச் சாப்பிடலாம்.

ஒரு பழம் நான்கு கிராம் நார்ச்சத்தைத் தருகிறது. குடல் இயக்கங்களை ஒழுங்குபடுத்த உதவுகிறது. மூலநோயைக் கட்டுப்படுத்துகிறது. உடல் எடை குறைக்க, உணவுக் கட்டுப்பாட்டில் இருப்பவர்கள் தினமும் ஒரு செவ்வாழைப்பழத்தை சாப்பிடலாம்.

செவ்வாழையிலுள்ள பொட்டாசியம், சிறுநீரகக் கற்கள் உருவாகாமல் தடுக்கும். எலும்புகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.



## மருத்துவரின் செய்தி

# நீரிழிவு காற்றாலும் வரும்



நம்மைச் சுற்றியிருக்கும் காற்று தூய்மையாக இல்லாவிட்டால் பல பிரச்சினைகள் வரக்கூடும் அந்தப் பட்டியலில் புதிதாகச் சேர்ந்திருப்பது, நீரிழிவு நோய்.

காற்றுக்கும் நீரிழிவுக்கும் தொடர்பிருக்கும் என்று நாம் கற்பனையிலாவது சிந்தித்திருப்போமா? ஆனால், இதற்கு மறுக்கமுடியாத சான்று இருக்கிறது என்கிறார் வோஷிங்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவர் ஜியாத் அல்-அலி.

காற்றில் உள்ள சிறு தூசுதுகள்கள், புகை போன்றவை நுரையீரலில் நுழைவதுபோலவே இரத்தத்திலும் கலந்து பல உடல் பாகங்களுக்குச் செல்கின்றன, அதனால் இதுபோன்ற பிரச்சினைகள் வரக்கூடும் என்று நம்பப்படுகிறது. சென்ற ஆண்டில் மட்டும் உலகெங்கும் சுமார் 32 இலட்சம் பேருக்குக் காற்று மாசு காரணமாக நீரிழிவு நோய் வந்திருக்கிறதாம்.

# வடமாகாணம் தழுவிய இயற்கைவழி விவசாய வாரம் ஆரம்பம்

புதிய வெளிச்சம் அமைப்பின் அனுசரணையுடன் இயற்கைவழி இயக்கத்தின் ஏற்பாட்டில் இயற்கைவழி விவசாய வாரமாகப் இம்மாதம் 08 ஆம் திகதியை முதல் 14 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த வாரத்தில் வடக்கின் சகல மாவட்டங்களிலும் இயற்கைவழி ஆர்வலர்களின் பங்கெடுப்புடன் பல்வேறு நிகழ்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன..

அந்தவகையில் 08.01.2019 அன்று மன்னாரில் தட்சணமருதமடுவில் பண்ணைப் பெண்கள் அமைப்பின் ஒழுங்கமைப்பில் காலை 9 மணி முதல் 1 மணிவரையும், 10.01.2019 கிளிநொச்சி நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது. 11.01.2019 ஜெயபுரம் பல்லவராயன் கட்டில் அமைந்துள்ள இளைஞர் சேவைகள் மன்றத்தின் விவசாயப் பயிற்சிப் பண்ணையில் காலை 9 மணி முதல் 01 மணிவரையும் நிகழ்வுகள் இடம்பெற்றன. 12.01.2019 அன்று மன்னாரில், அடம்பன் பண்ணையில் காலை 10 மணி முதல் 1 மணிவரையும் நடைபெறும். பாடசாலை மாணவர்களிற்கான விழிப்புணர்வு, உள்ளூர் விவசாயிகளுடனான கலந்துரையாடல், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களிற்குரிய அங்காடிகள் அறிமுக நிகழ்வு என்பனவும் மேற்குறித்த நிகழ்வுகளின் முக்கிய அம்சங்களாகும்.

13.01.2019 அன்று யாழ்ப்பாணத்தில், புன்னாலைக்கட்டுவனில் உள்ள மார்கோசா கிறீன் இல் காலை 10 மணி முதல் 1 மணி வரை இடம்பெறவுள்ள நிகழ்வில் இயற்கைவழி இயக்கத்தின் இணையத்தளம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதுடன் 14.01.2019 முல்லைத்தீவு கைவேலியில் அமைந்துள்ள செல்வபாக்கியம் பண்ணையில் காலை 10 மணி முதல் 1 மணி வரை நிகழ்வுகள் இடம்பெறும். பாடசாலை மாணவர்களிற்கான விழிப்புணர்வு, உள்ளூர் விவசாயிகளுடனான கலந்துரையாடல் என்பவற்றுடன்இயற்கைவழி உள்ளீடுகள் உற்பத்தி தொடர்பான பயிற்சி என்பன நிகழ்வின் முக்கிய அம்சங்களாகும். மேற்குறித்த நிகழ்வுகளில் அவசியம் கலந்துகொள்ளுமாறு இயற்கைவழி இயக்கத்தின் சார்பில் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது .

மேலதிக தகவல்களிற்கு இயற்கைவழிச் செயற்பாட்டாளர் கு. வசீகரன் (077 378 8795 அல்லது 075 973 2169) அவர்களைத் தொடர்புகொண்டு தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் .









# வாரபலன்

### மேடம்

செயல்களை நேர்த்தியாக முடிப்பீர்கள். குடும்பத்தில் நின்றுபோயிருந்த சுப நிகழ்ச்சிகள் நடக்கும். குடும்பத்தினருடன் பொழுதை அமைதியாகக் கழிப்பீர்கள். சிலருக்கு வெளிநாட்டிலிருந்து சுபச் செய்திகள் வந்து மகிழ்விக்கும்.

### ரிஷபம்

குடும்பத்தில் அமைதி நிலவும். புதிய நட்புகள் உருவாகும். நம்பிக்கைகள் பலப்படும். மனச்சோர்வுக்கு ஆளாகாமல் உழைப்பீர்கள். தேக ஆரோக்கியம் பலப்படும். உத்தியோகஸ்தர்கள் இடையூறுகளைச் சமாளித்து வேலைகளை முடிப்பார்கள்.

### மிதுனம்

செய்யும் செயல்களில் சிறிது தாமதம் ஏற்படலாம். வெளியிடங்களிலிருந்து இனிய செய்திகள் வந்து சேரும். பொருளாதாரம் நிறைவாக இருப்பதால் சேமிப்புக்கு இடமுண்டு. புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். முன்னேற்றத்திற்கான தடைகள் விலகும்.

### கடகம்

உறவினர்களுடன் மனக்கசப்புகள் தோன்றினாலும் சரியாகி விடும். குடும்பத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். வியாபாரிகள் லாபத்தை அள்ளுவார்கள். சிறு தடைகள் ஏற்பட்டாலும் அனைத்தும் நல்லபடியாக முடியும்.

### சிம்மம்

திட்டமிட்ட பணிகளைச் செய்து முடிப்பதில் சில சிரமங்கள் ஏற்பட்டாலும் அவற்றைச் சரியாக செய்து முடிப்பீர்கள். நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு உதவி செய்வீர்கள். வியாபாரிகளுக்கு அலைச்சலும் டென்ஷனும் குறையும். வருமானம் அதிகரிக்கும்.

### கன்னி

குடும்பத்தில் புதிய நட்புகள் உருவாகும். பொருளாதாரத்தில் பெரிய முன்னேற்றம் ஏதும் ஏற்படாது. நிம்மதி கொஞ்சம் குறையும். சுப நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு சிறுசிறு தடங்கல்கள் ஏற்படலாம். உத்தியோகஸ்தர்கள் அலுவலகப் பணிகளில் கவனம் செலுத்தவும்.

### துலாம்

உங்கள் செல்வாக்கு கூடும். உடல் ஆரோக்கியம் பலப்படும். மருத்துவச் செலவும் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறையும். வீண் அலைச்சல்கள் ஏற்படாது. வரவேண்டிய பணம் தானாக வந்து சேரும். சுபச்செலவுகளைச் செய்து மகிழ்வீர்கள்.

### விருச்சிகம்

எதிர்பார்த்த பொருளாதார அபிவிருத்தி சுமாராக இருக்கும். பணப்புழக்கம் தாராளமாக இராது. சுப நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு உகந்த தருணமில்லை. காரியங்களை பலமுறை யோசித்து செயலாற்றவும். சிலருக்கு கண் சம்பந்தமான நோய்கள் உண்டாகும்.

### தனுசு

சோதனைகள் இருந்தாலும் நலன்கள் கூடும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். அலைச்சல்கள் குறையும். உங்களிடமிருந்து விலகி இருந்த உறவினர்கள் மீண்டும் வந்து சேர்வார்கள். உத்தியோகஸ்தர்கள் கொடுக்கும் பணிகளை திறம்படச் செய்வதில் சிரமம் ஏற்படும்.

### மகரம்

முன்னேற்றகரமான காலமிது. கவலைகள் குறையும் உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். உடன்பிறந்தோர் வகையில் நிலவிவந்த மனக்கசப்புகள் நீங்கும். வியாபாரிகள் கடுமையாக உழைத்து வருவாய் ஈட்டி முக்கிய பிரச்சினைகளை சமாளிப்பீர்கள்.

### கும்பம்

உங்கள் மதிப்பு மரியாதை கூடும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். உறவினர்களுக்கு உங்களால் ஆன உதவிகளைச் செய்வீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். உத்தியோகஸ்தர்களுக்கு பிரச்னைகள் குறையும். சக ஊழியர்களும் ஆதரவு கரம் நீட்டுவர்.

### மீனம்

குடும்பத்தில் குதூகலம் தாண்டவமாடும். முயற்சிகள் யாவும் வெற்றியைத் தரும். சமூகத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். தொழிலிலும் ஏற்றங்களைக் காண்பீர்கள். குறிக்கோள்கள் ஒன்றன்பின் ஒன்றாக வெற்றியடையும். புதிய முதலீடுகளைச் செய்வீர்கள்.

# பாகுபாடு காட்டலாமா



ஒரு காட்டில் ஒரு பஞ்சவர்ணக் கிளியும் காகமும் வாழ்ந்து வந்தன. கிளி எப்பொழுதுமே காகத்தை கறுப்பா கறுப்பா என்று அழைத்து கிண்டல் செய்து வந்தது. இதையிட்டு காகம் பெரிதாக வருந்தியது. ஒரு நாள் அழகான கிளியை ஆசைப்பட்டு, ஒரு வேட்டைக்காரன் உயிரோடு பிடித்துக் கொண்ட போய்விட்டான். தான் தப்பிவிட்டேன் என்று மன ஆறுதலடைந்த அதே சமயம், என் நண்பனைப் பிடித்து விட்டானே என்று கவலைப்பட்ட காகம், வேட்டைக்காரனைப் பின்தொடர்ந்தது. அன்று அமவாசை நாள். வேட்டைக்காரனின் மனைவி வாசல் சுவரில் படையல் வைத்து கா கா என்று கூவிக் காகத்தை அழைத்தாள். அப்போது அங்கு வந்த காகம் அங்கு கூட்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்த கிளியைப் பார்த்தது. "கிளியே தன் மொழியில் மனிதன் உன்னைப் பேச வைக்க அடைத்து வைத்திருக்கிறான். ஆனால் என்னை என் மொழியில் அழைத்து சாப்பிடத் தருகிறாள்" என்றது . கிளி எதுவும் பேசமுடியாமல் வெட்கித் தலைகுனிந்தது. நிறப்பாகுபாடு பார்த்து, இவ்வளவு காலமும் காத்தைக் கிண்டல் செய்ததை எண்ணி வருந்தி, காகத்திடம் மன்னிப்புப் கோரியது. கொஞ்ச நேரம் கழித்து, காகம் மெல்லக் கூட்டின் கதவைத் திறந்துவிட, கிளியும் வெளியேறி, தன் நண்பனுடன் ஒன்றாகப் பறந்து சென்றது.




## ஆத்திசூடி அறிவோம்

1. **சித்திரம் பேசேல்**
   பொய்யான வார்த்தைகளை மெய் போலப் பேசாதே.
2. **சீர்மை மறவேல்**
   புகழுக்குக் காரணமான நல்ல குணங்களை மறந்து விடாதே.
3. **சுளிக்கச் சொல்லேல்**
   கேட்பவருக்குக் கோபமும் வெறுப்பும் உண்டாகும் படி பேசாதீர்.
4. **சூது விரும்பேல்**
   ஒருபொதும் சூதாட்டத்தை விரும்பாதே.
5. **செய்வன திருந்தச் செய்**
   செய்யும் செயல்களை தவறோ குறையோ ஏதும் இல்லாமல் செய்யவும்

## கேள்விக்கென்ன பதில்?

1. நின்றபடியே தூங்கும் மிருகம் எது?
2. ஒரு குருவியின் கழுத்திலுள்ள எலும்புகள் எத்தனை?
3. மூக்கில் பல் உள்ள விலங்கு எது?
4. மிகச் சிறிய இதயம் கொண்ட காட்டு மிருகம் எது?
5. திமிங்கலத்தின் ஆயுட்காலம் எவ்வளவு?







விடைகள்
1. குதிரை 2. 23 3. நத்தை 4. சிங்கம்
5. 500 ஆண்டுகள்

## கிராமப்புறப் பழமொழிகள்

1. வைர ஊசி என்பதால் வயிற்றில் குத்த முடியுமா?
2. ஆறு நிறையத் தண்ணீர் இருந்தாலும், நாய்க்கு நக்குத் தண்ணீர்தானே?
3. கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக்கொடுத்த சொல்லும் எத்தனை நாளைக்கு வரும்?
4. மாடு இளைச்சாலும் கொம்பு இளைக்காது
5. மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொழுத்தலாமா?



## மனிதா மனிதா

குருதியின் அளவு - 5.5 லீட்டர்

உடலில் இருந்து வெளியேறும் சிறுநீரின் அளவு - 1.5லீற்றர்

ஒரு நாளில் அருந்த வேண்டிய நீரின் அளவு - 6 லீற்றர்

இரத்த நாளங்களின் மொத்த நீளம் - 100,000கி.மீ

மிகவும் குளிரான பகுதி - மூக்கு

வியர்க்காத உறுப்பு - உதடு

சிவப்பு அணுவின் சராசரி ஆயுட்காலம் - 120 நாட்கள்

நகம் வருடத்திற்கு வளரும் சராசரி அளவு - 12.5 அங்குலம்

வியர்வைச் சுரப்பிகள் எண்ணிக்கை - 200,000

இறந்த மனிதனின் இதயத் துடிப்பு அடங்கு நேரம் - 20 நிமிடங்கள்


## குறள் ஒன்று விளக்கம் இரண்டு

**குறள் 292:**

**பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்.**

**மு. வரதராசன் உரை:**

குற்றம் தீர்த்த நன்மையை விளைக்குமானால் பொய்யாச் சொற்களும் வாய்மை என்று கருதத் தக்க இடத்தைப் பெறும்.



**மு. கருணாநிதி உரை:**

குற்றமற்ற நன்மையை விளைவிக்கக் கூடுமானால் பொய்யான சொல்லும்கூட வாய்மை என்று கூறத்தக்க இடத்தைப் பெற்றுவிடும்.

**சாலமன் பாப்பையா உரை:**

குற்றம் அற்ற நன்மையைத் தரும் என்றால் உண்மை சொல்ல வேண்டிய இடத்தில் பொய்யும் சொல்லலாம்.

## அட அப்படியா?



மனித இதயத்தின் எடை 0.3 கிலோகிராம். ஆனால் உலகிலேயே மிகப்பெரிய விலங்கான திமிங்கலத்தின் இதய எடை எவ்வளவு தெரியுமா? சிறிய அளவுள்ள காரின் எடை, அதாவது 430 கிலோகிராம் எடையுள்ள இதயத்தை திமிங்கலம் கொண்டுள்ளது.

## இதயம் இல்லா உயிரினம்

இதயம் இல்லாமல் எந்த ஒரு உயிரினமும் உயிர் வாழ முடியாது என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. ஏனெனில் மண்புழுவிற்கு இதயமே கிடையாது. அதன் ஒவ்வொரு உடல் கட்டுக்கு கிளைவிடும் கிளைக்குழாய்களும், உடல் முழுவதும் பாயும் நீளமான நாளங்களும் உள்ளதே தவிர, தனி உறுப்பாக இதயம் என்ற ஒன்று இல்லை.



## வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்





# இறைவனை எப்படி அழைப்பது?

கண்ணனை பல திரு நாமங்கள் கொண்டு அழைப்போம். அதில் தாமோதரன் என்று கண்ணனை அழைப்பதற்கு ஒரு விசேசமான அர்த்தம் இருக்கிறது. கண்ணன் செய்த குறும்புகளை ரசித்தபடியே, அவனது தாயான யசோதை, "நீ சிறிது நேரமாவது ஒரு இடத்தில் பொருந்தி உட்காரவோ நிற்கவோ செய்ய மாட்டாயா கண்ணா" எனக் கூறிக்கொண்டே ஒரு சிறு கயிற்றால் அவனது இடுப்பில் கட்டி விட்டாளாம்.

அந்தக் கயிற்றின் தழும்பை இன்றளவும் கூட அவனது இடுப்பில் நாம் பார்க்கலாம். தாமல் எனும் ஊரில் கோயில் கொண்டுள்ள தாமோதரப் பெருமானின் விக்கிரகத்தில் அந்த க் கயிற்றின் அடையாளத்தைச் சில சமயங்களில் கண்கூடாகக் கண்டதாக பெரியவர்கள் கூறுவார்கள்.

'தாமோதரா' என்ற திருநாமம் கொண்டு அவனை அழைக்கும் போதெல்லாம், யசோதையின் அன்புக்குக் கட்டுப்பட்டு அந்தக் கயிற்றுக்கு கட்டுண்டவன்போல இருந்தாயே என எண்ணிக்கொண்டே அவனை அந்த திருநாமத்தைக் கொண்டு அழைக்கலாம். "தாம்பே கொண்டார்த்த தழும்பு" என்று முதல் திருவந்தாதியில் பொய்கையாழ்வார் சாதித்திருக்கிறார்.

ரத்னாகரன் என்ற கொள்ளையனாக இருந்து நாரதரால் ராம நாமத்தை சொல்ல சொல்லி கேட்டும், அந்த ராம நாமத்தை கூட சரி வர சொல்ல வராமல் "மரா மரா மரா" என்றே உச்சரித்து மரா என்ற சப்தமே ராம நாமமாக மாற, இறைவனின் பரிபூரண அருளுக்கு ராம நாமத்தால் பாத்திரமானவர் அன்றோ வால்மீகி. இறைவனை எவ்வாறு அழைப்பது? எதுவுமே தெரியவில்லையா? ராம நாமத்தையே இடைவிடாது சொல்லுவோம். இறைவனை நாம் உள்ளன்போடு அழைப்போம்.

# சுமைகளைப் பகிர்பவன்

நபிகளார் ஒருநாள் இரவு மக்காவின் தெரு வழியாகச் சென்று கொண்டிருந்தார். மக்கள் நடமாட்டமில்லாத ஓரிடத்தில் ஒரு மூதாட்டி மூட்டைகளுடன் தூ க்க இயலாச் சுமைகளோடு நின்று கொண்டிருந்தார்

அந்த மூதாட்டியிடம் நபி (ஸல்), "தாங்கள் எங்கே செல்ல வேண்டும்?" எனக் கேட்டுச் சுமைகளை தன் தலை மீது வைத்துக்கொண்டார். இருவரும் நடந்து செல்லும்போது, "இந்த இரவு நேரத்தில் தூக்க இயலாத சுமைகளோடு எங்கே செல்கிறீர்கள்?" என அண்ணலார் கேட்டார்கள்.


"இந்த ஊரில் யாரோ முஹம்மது என்பவர், புதிய கொள்கை ஒன்றைக் கூறி மக்கள் மனதை மாற்றி வருகிறாராம். எங்களது மூதாதையர் வணங்கி வந்த தெய்வங்களை எல்லாம் வணங்கக் கூடாது என்கிறாராம். அல்லாஹ் ஒருவரை மட்டுமே வணங்கி வழிபட வேண்டுமென்று சொல்கிறாராம். நான் அவரைப் பார்த்ததுகூட இல்லை. எனவே நான் அந்த முஹம்மதை சந்தித்தால், மனம் மாறி எங்களது மூதாதையரின் கொள்கைகளை விட்டு விடுவேனோ என்கிற அச்சத்தால் தான், இந்த ஊரை விட்டே செல்ல இருக்கிறேன்" என்று படபடவெனப் பொரிந்து தள்ளினார் அந்த மூதாட்டி.

நபிகளார் தலைச் சுமையோடு ஊருக்கு வெளியே மூதாட்டியுடன் நடந்து செல்லும்போது ஒரு குறிப்பிட்ட இடம் வந்ததும் அந்த மூதாட்டி, "போதும், இனி நான் தனியாகப் பிரயாணம் செய்வேன். நீங்கள் என்னுடன் வர வேண்டாம்" எனக் கூறிவிட்டு,

"ஆமாம், இந்த இரவு நேரத்தில் நான் தங்களிடம் உதவி கேட்காமலேயே எனக்கு உதவி செய்தீர்களே, தாங்கள் யார்? " என்று கேட்டார் மூதாட்டி.

" நீங்கள் இவ்வளவு நேரம் எந்த முஹமதைப் பற்றிக் கூறி, அவரைச் சந்திக்கவே கூடாது என்று இந்த ஊரை விட்டே வெளியேறுகிறீர்களோ, அந்த முஹமது (அல்லாஹ்வின் தூதர்) நான்தான்" என நபிகள் நாயகம் பணிவாகக் கூறினார்.

**அந்த மூதாட்டி, நபியின் அன்பைக் கண்டு பெரிதும் ஆச்சரியமடைந்தார்.**






# விசுவாசம் மலையையும் அசைக்கும்

இயேசு கிறிஸ்துவிடம் வந்த ஒரு மனிதர் அவர் முன்பாக மண்டியிட்டு, "ஆண்டவரே, என் மகனுக்கு இரங்கும். அவன் நோய்வாய்ப்பட்டு மிகவும் வேதனைப்படுகிறான் அவனைப் பார்க்கும்போது எனக்குச் சொல்ல முடியாத வேதனை உண்டாகிறது. அவனை உம்முடைய சீடர்களிடத்தில் கொண்டு வந்தேன் அவனைக் குணப்படுத்த அவர்களால் முடியாமல் போய்விட்டது" என்றார்.


இயேசு அமைதியாக, "அவனை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்". என்றார். பெரும் நோயால் வாடும் அந்த இளைஞனுக்குள் இருந்த பிசாசை அவர் அதட்டினார். அந்தப் பிசாசு உடனே அவனை விட்டு வெளியேறியது. அந்தக் கணமே இளைஞன் குணமடைந்தான்.

அதைப் பார்த்துக்கொண்டிருந்த சீடர்கள் இயேசு தனியாக இருக்கும்போது அவரிடம் வந்தார்கள். "நாங்களும் இதைத்தான் சொன்னோம். ஆனால் எங்கள் பேச்சுக்கு ஏன் மதிப்பில்லை?" என்று கேட்டார்கள்.

அதற்கு இயேசு, "உங்கள் அவிசுவாசம்தான் காரணம்" என்றார். "கடுகளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொன்னால் அது போகும். உங்களால் இயலாத காரியம் ஒன்றும் இராது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்தப் பிசாசு, ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்ற எந்த விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது" என்றார்.

ஆதாரம்: மத்தேயு17:14-21

# தீயில் கலந்
# ஓயாத நினை





விடுதலைப் புலிகளும் ரெலோ இயக்கத்தினரும் இணைந்து செயற்பட்ட காலம். குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை முதலான முக்கியஸ்தர்கள் பொலிஸாரால் கைதாகியிருந்தனர். இவர்களைப் பொறுப்பேற்ற இராணுவம் மிகக் கொடூரமாகச் சித்திரவதை செய்தது. இந்தச் சித்திரவதையெல்லாம் பாரதூரமான காயங்கள் அல்ல எனச் சாட்சியமளிக்க சட்ட வைத்திய அதிகாரி சல்காது என்பவர் எப்போதுமே தயாராக இருந்தார். சித்திரவதையின் விளைவாக சிலரை அடையாளம் காட்ட வேண்டியிருந்தது. யாழ். பல்கலைக்கழக மாணவன் விமல்ராஜ், தனியார் கல்வி நிலையத்தில் கற்பித்த சிவச்செல்வம் முதலானோர் கைதாக நேர்ந்தது. இவர்களுடன் கைதாகியிருந்த தாமுகந்தையா, புறோக்கர் எனப்படும் சதீஸ்வரன் உட்பட சிலர் 1983 இல் வெலிக்கடையில் கொல்லப்பட்டனர். யாழ். பல்கலைக்கழக மாணவர்களான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன், நேசன் என்றழைக்கப்படும் ரவீந்திரதாஸ், தபால் திணைக்கள ஊழியரான தேவர் அண்ணா என்றழைக்கப்படும் ஆறுமுகம் தங்கவேலாயுதம், பொன்னம்மான், பிற்காலத்தில் இளங்குமரன் என்றழைக்கப்பட்ட பேபி அண்ணா (சுப்பிரமணியம்), ரெலோவைச் சேர்ந்த ஒபரோய் தேவன், அவரது தம்பி சின்ன பறுவா முதலானோர் நாட்டில் இருக்க முடியாத நிலை ஏற்பட்டது.

பரீட்சை எழுதிவிட்டு வீட்டுக்கு வந்த கிட்டு தனது அடையாள அட்டையை மேசையில் வைத்துவிட்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தார். எந்த நேரமும் படையினர் வரலாம் என்ற எச்சரிக்கை உணர்வுடன் இருந்த கிட்டுவுக்கு வாகனங்களின் இரைச்சல் அண்மித்துக் கேட்டது. அவர் பின் பக்கத்தால் பாய்ந்து ஓடவும் படையினர் வீட்டுக்குள் புகவும் சரியாக இருந்தது. உள்ளே வந்த படையினர் 'யார் ஓடினது" எனக் கேட்டனர்.

'ஒருவருமில்லை" என்றார் கிட்டுவின் அம்மா.

சாப்பாட்டுக் கோப்பையைக் கண்ட படையினர் 'யார் சாப்பிட்டது" எனக் கேட்டனர்.

'நான்தான்" எனப் பதிலளித்த கிட்டம்மா - அத்துடன் தனது கையைத் தூக்கிக் காட்டினார். அதில் சோற்றுப் பருக்கைகள் காணப்பட்டன. கிட்டு பாய்ந்து ஓட முனையும்போதே அவரின் சாப்பாட்டுக் கோப்பைக்குள் தனது கையைப் புதைத்தெடுத்திருந்தார் கிட்டு அம்மா.

● ● ●

பாதுகாப்புக் கருதி தமிழகத்துக்குப் பயணமானவேளை அங்கிருந்தோருக்கு உடற்பயிற்சிகளை வழங்கினார் ராகவன். திருப்பரங்குன்றம் சரவணப் பொய்கைக்கு எதிரேயிருந்த கல்யாண மண்டபத்திலேயே இவர்கள் தங்கியிருந்தனர். ஒரு விசேட தினமொன்றில் சரவணப்பொய்கையில் நீராடிவிட்டு தமது பூணூல்களை அறுத்துவிட்டு புதிய பூணூலை அணிந்தார்கள் பிராமணர்கள். கரையில் இருந்த ஒரு பிராமணர் இந்தச் சடங்கை நடத்திக் கொண்டிருந்தார். அவருக்கு தட்சணையும் வழங்கப்படுவதைக் அவதானித்தார் கிட்டு. உடனே தானும் அங்கு சென்று நீராடி பூணூல் அணிந்து தட்சணை கொடுத்து விட்டு வந்தார். கொஞ்சநாள் இந்தப் பூணூலுடனே உலாவினார். அங்கு தலைவர் வந்ததும் இதனைப் பார்த்தார். விளக்கம் கேட்டார்.

'பூணூல் இருப்பதால்தானே மற்றவர்களை விட தாங்கள் உயர்ந்தவர்கள் என நினைக்கிறார்கள். எல்லோருமே பூணூல் அணிந்தால் இந்தப் பிரச்சினை எழாதல்லவா?" என விளக்கம் சொன்னார். ஆனால் தலைவரோ எந்த ஒரு தரப்பினரதும் மனம் கோணும்படி நாம் நடக்கக்கூடாது என அறிவுறுத்தினார். அவரது அன்புக் கட்டளைக்கு மதிப்பளித்து கிட்டு பூணூலைக் கழற்றினார். இந்தப் பூணூலைப் போட்டுக் கொண்டு கிட்டு செய்த குறும்புகள் அத்துடன் முடிவுக்கு வந்தன.

சமையல் கலை விடயத்தில் கிட்டு ஆர்வமாக இருந்தார். ஒரு நாளைக்கு இருவர் சமையல் என்று முறை அமுலில் இருந்தது. கிட்டுவின் முறை வரும் நாட்களில் கொத்துரொட்டி. எதிலும் தனித்துவமாகத் தெரிந்தார் அவர். 1983 ஆரம்பத்தில் பொட்டு, விக்ரர் முதலானோர் பயிற்சி பெற்ற உடையார்கட்டு முகாமிலும் சமையல் பொறுப்பைக் கிட்டுவே ஏற்றுக்கொண்டார். அங்கு நடந்த சுவராஷ்யமான விடயங்களை பொட்டு விடுதலைப் புலிகள் பத்திரிகையில் எழுதியிருந்தார். கிட்டுவைப் பற்றிய தமது பார்வையைப் பலரிடமும் எழுத்தில் வாங்கித் தொகுத்திருந்தார் அதன் ஆசிரியர் ரவி.

பொட்டு எழுதியவற்றில் இன்னொரு முக்கியமான விடயமும் சுட்டிக் காட்டப்பட வேண்டியது. 'இயக்கம், எங்கட பெடியங்களின்ர உடுப்பைத் தோய்க்கிற வேலையை எனக்குத் தந்தால், அந்த நிமிசத்தில இருந்து அதை எப்படி வெள்ளையாத் தோய்க்கிறது எண்டதைப் பற்றித்தான் நினைப்பன்" என்ற கிட்டுவின் கூற்று ஒரு பாடமாகும். விடுதலைக்காகப் புறப்பட்ட நாம் எந்த வேலையாயினும் அதனை ஏற்றுச் செய்ய வேண்டும் என்ற அறிவுரை அதில் பொதிந்திருந்தது. இதில் எந்தக் கௌரவப் பிரச்சினையும் இல்லை. தேவைக்கே முக்கியத்துவம். இன்று அவர் இப்படித்தான் இயக்கத்தில் இருந்தார். - இயக்கத்தில் இவரது நிலை மோசமானதாக இருந்தது என்று அளவுகோல் வைத்து எழுதும் புலம்பெயர் எழுத்தாளர்கள் கிட்டுவை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். துயிலும் இல்லத்தில் பிரிகேடியரின் வித்துடலுக்கு அருகில் எல்லைப்படை வீரரினதோ, போருதவிப் படை வீரரினதோ வித்துடல்கள் புதைக்கப்பட்டன என்ற யதார்த்தத்தை மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். உணராத விடயத்தைக் கேட்டுத் தெரிவதில் தவறில்லை. எல்லாமே விடுதலைக்கான பங்களிப்பு என்பதே இதற்கான விடை.

● ● ●

கேணல் கிட்டு, எந்தச் சூழலிலும் பதற்றமடையாதவர். ஒருநாள் எதிர்பாராதவிதமாக படையினரிடம் சிக்க நேர்ந்தது. நிதானமாக நின்றார். சயனைட் குப்பியைக் கண்ட படையினர் 'இது என்ன?" என்று கேட்டனர். ஆஸ்துமா மருந்து என நிதானமாகப் பதிலளித்தார். தமது வாகனத்துக்குப் பின்னால் அவரது மோட்டார் சைக்கிளில் வருமாறு கூறினர் படையினர். அவர்கள் கூறியது போலவே பாவனை காட்டிய கிட்டு, ஒரு ஒழுங்கைக்குள்ளால் மோட்டார் சைக்கிளைத் திருப்பிக் கொண்டுபோய் தப்பித்தார். இது போலவே குண்டுவீச்சில் கால் சிதைந்தபோதும் துப்பாக்கியால் சுட்டார். (மயங்கும் வரை)

● ● ●

இலங்கை அரசைப் பொறுத்தவரை அரசுடனான பேச்சுக்கு முதலடியை எடுத்து வைத்தவர். காங்கேசன்துறையில் இந்த ஆரம்பகட்டப் பேச்சு நிகழ்ந்தது. புலிகள் தரப்புக்கு கிட்டுவும் அரசுத் தரப்புக்கு எட்டியாந்தோட்டை எம்.பி. வின்சென்ட் பெரேராவும் தலைமை தாங்கினர். படைகளைப் பொறுத்தவரை கப்டன் கொத்தலாவலவுடன் நடத்திய பேச்சு கிட்டுவைப் பற்றிய ஒரு அபிப்பிராயத்தை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த படையினரை நடத்திய விதம் பற்றி சிந்திக்கத் தொடங்கினர். குறிப்பாக தடுத்து வைக்கப்பட்டிருநத அதிகாரியின் பிறந்தநாளின் போது தங்கச் சங்கிலி ஒன்றைப் பரிசளித்தமை தடுத்து வைக்கப்பட்ட படையினரை எந்தச் சூழலிலும் கொல்ல மாட்டோம் என வாக்குறுதி வழங்கியமை எனப் பல்வேறு விடயங்களைக் குறிப்பிடலாம். தம்முடன் போரிட்டுக் கொண்டே தமது தேவைக்கான விறகுகளை அனுப்புபவர் எப்படிப்பட்டவராக இருப்பார் என எண்ணினர்.

இராஜதந்திரத்திலும் இவர் தனித்துவமாகத் திகழ்ந்தார். அருணா உயிருடன் இருக்கும்

# ந்த தீரத்தின்
# னவலைகள்...!



தயாளன்

விடயத்தை சிறையிலிருந்து விடுதலைப் புலிகள் ரவி சூசகமாகத் தெரிவித்த விடயத்தை மனதில் வைத்து கைதிகள் பரிமாற்றத்தை கையாண்ட விதம் குறிப்பாக இலங்கை அரசு தனது சிப்பாய்களின் விடயத்தில் எவ்வளவு தூரம் கரிசனையாகவுள்ளது என்பதை சிங்கள மக்கள் அறிய வேண்டும் எனக் கூறி இவர் போட்ட தூண்டிலில் அரசு விழுந்தது. கைதிகள் விடுதலை சாத்தியமாயிற்று. இதன்பின் ஈழ முரசு 'ஒரு தேசமெனில் முரண்பாடு: இரு தேசமெனில் உடன்பாடு" என்று கிட்டுவும் கொத்தலாவலவும் கைகொடுக்கும் படத்தைப் போட்டு எழுதியிருந்தது. இரு நாடுகளுக்கு இடையில்தான் கைதிகள் பரிமாற்றம் நடைபெறமுடியும் என ஆரம்பத்தில் அரசு குறிப்பிட்டதை நினைவூட்டவே ஈழமுரசு அவ்வாறு குறிப்பிட்டது.

• • •

போராளிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையில் உள்ள முக்கிய வித்தியாசம் தவறுகளை ஒப்புக்கொள்வதா? இல்லையா? என்பது. 1986 காலப் பகுதியில் பாஷையூரில் ஒரு பிரச்சினை நடந்தது. ஒரு போராளிக்கு பொதுமகன் ஒருவர் அடித்துவிட்டார். அடி வாங்கிய போராளி விடயத்தைத் தெரிவித்து வேறு விடயமாகச் சென்று விட்டார். இயக்கத்துக்கு அடிப்பதா என நினைத்த போராளிகள் சிலர் சம்பந்தப்பட்ட பொதுமகனைப் பிடித்து வந்து தாக்கியதில் அவர் உயிரிழந்து விட்டார். அவர் ஒரு குடும்பஸ்தர். இதனைவிட அந்தக் குடும்பத்தினர் போராட்டத்துக்கு பல வகையிலும் உதவியவர்கள் அவர்களின் தொடர்பினால் போராட்டத்தில் இணைந்த இருவர் மட்டக்களப்பில் வீரச்சாவெய்தினர்.

நல்லூரில் நடைபெற்ற பிரமாண்டமான கூட்டத்தில் பாஷையூர் சம்பவம் தமது தரப்புப் பிழையே எனப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டார் கிட்டு. ஏற்கனவே தம்முடன் முதலில் தொடர்பு கொண்ட போராளியை மரணமானவரின் மாமி (மனைவியின் தாய்) சந்திக்க வேண்டுமெனக் கேட்டிருந்தார். ஆனால் இந்த விபரீதத்துக்குப் பின் அவர்களின் முகத்தில் எப்படி விழிப்பது என்ற தயக்கத்தில் அந்தப் போராளி போகவில்லை. ஒருநாள் தற்செயலாக இந்தப் பெண்மணியின் மகன் (இறந்தவரின் மைத்துனர்) அப்போராளியைக் கண்டுவிட்டார். உடனே, 'அம்மா உங்களை வரட்டாம்", என்று விடப்பிடியாக சைக்கிளில் ஏற்றிக் கொண்டு போய் தனது தாயார் முன்னிலையில் விட்டார்.

'தம்பி! நடந்த சம்பவம் தொடர்பாக இனி எதுவும் செய்ய முடியாது. எங்களுக்கு வேதனைதான் நாங்களும் ஆத்திரத்தில் பலவற்றையும் பேசினோம். எங்களைச் சந்திக்க நீங்களும் வரவில்லை. இத்தனை ஆயிரம் மக்களுக்கு முன்னால் கிட்டு அந்தச் சம்பவம் தங்கள் தரப்பு தவறு என்று சொன்னாரே, அது எமது காயத்தை ஓரளவு ஆற்றிவிட்டது. நீங்கள் முன்பு போல வீட்டுக்கு வரவேண்டும் சாப்பிட வேண்டும்" எனவேண்டினார் அவர். அந்த அம்மாவின் காலில் விழுந்து வணங்க வேண்டும் போலிருந்தது அப்போராளிக்கு.

தவறை ஒப்புக்கொள்வதன் மூலம் வந்த மக்கள் மத்தியில் கிட்டு உயர்ந்து நின்றார் என்பதைப் புரிந்து கொண்டார் அப்போராளி.

• • •

ஆயுதப் போராட்டம் மட்டுமல்ல அகிம்சைப் போருக்கும் தான் தயார் என அறிவித்தவர். தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது தம்மை விடுதலை செய்ய வேண்டும் அல்லது நாட்டில் போராடிக் கொண்டிருக்கும் புலிகள் வசம் ஒப்படைக்க வேண்டும் எனக் கோரிக்கை வைத்து சாகும் வரை உண்ணாவிரதமிருக்கப் போவதாக அறிவித்தார். இதனைத் தொடர்ந்து கைதிகளாக இருந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் விமானம் மூலம் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டனர். இவர்களில் கிட்டுவையும் மேலும் ஒரு சில உறுப்பினர்களையும் (வைத்தியத்துக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்கள்) இந்தியப் படை விடுவித்தது.



தன்னோடு கொண்டு வரப்பட்டோர் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் தான் மட்டும் விடுதலையாவது குறித்துத் தேம்பித் தேம்பி அழுத காட்சி சம்பந்தப்பட்ட போராளிகளால் என்றுமே மறக்க முடியாது. இது கிட்டுவின் இன்னொரு பக்கம். இதற்கு முன்னதாக இயக்க மோதலில் உயிரிழந்த(ஈ.பி.ஆர்.எல்.எவ்வால் சுடப்பட்ட ) நாயன்மார்கட்டைச் சேர்ந்த திருச்சிற்றம்பலம் சுரேந்திரனின் இறுதி நிகழ்வில் அவர் அழுததை போராளிகள் கண்டிருந்தனர். சுழிபுரத்தில் புலிகளின் சுவரொட்டிகளை ஒட்டச் சென்ற மாணவர்களை புளொட் சுட்டுக்கொன்று ஆணுறுப்பை வெட்டி வாயில் வைத்துப் புதைத்தபோதும் பொறுமை காத்தவர் ரெலோவுடனான பிரச்சினையின் போது பொறுமையிழந்தார்.

• • •

கிட்டுவில் மக்கள் எவ்வளவு பாசம் வைத்திருந்தனர் என்பதைத் தலைவரும் அறிவார். சுதுமலையிலிருந்து இந்தியாவுக்கு கூட்டிச் செல்லப்பட்ட தலைவரை மீண்டும் அதே இடத்திற்கு அழைத்து வந்தனர். இதன்போது மக்கள் கிட்டுவைக் கண்டு தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியமை அவர் நேரில் கண்ட விடயம். அதுபோல் சுதுமலை கூட்டத்தில் இங்கு உரையாற்றத் தொடங்கியபோது சுதுமலைக் கூட்டத்தில் கிட்டு உரையாற்றத் தொடங்கிய போது மக்கள் வெளிப்படுத்திய ஆரவாரம் மற்றொரு உதாரணம். அவர் காலை இழந்த நேரத்தில் நடந்துகொண்ட விதம் கிட்டுவின் மனஉறுதியை வெளிக்காட்டியதாக தலைவர் சொன்னதும் குறிப்பிடத்தக்கது. இக்காலகட்டத்தில் நல்லூரடியில் வாகனத்தில் வந்த கிட்டுவை, எல்லோரும் பார்க்கமுடியாமல் இருந்ததால் மக்கள் விசனமடைந்தனர். மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்த கிட்டு வாகனத்தில் இருந்தவாறே உரையாற்றினார்.

ஒரு தளபதியாக, மாவட்ட நிர்வாகியாக, அனைத்துலகப் பொறுப்பாளராக, எழுத்தாளராக, ஓவியராக, இராஜதந்திரியாக, கப்பலுடன் தன்னை எரித்து ஈகம் செய்யக்கூடிய போராளிகளாக எங்கள் மக்கள் மத்தியிலும் அனைத்துலகிலும் தன்னை அடையாளப்படுத்திய கிட்டுவின் நினைவு என்றென்றும் நன்றியுள்ள ஈழத்தமிழரால் அழிந்து போகாது. ஒரு தளபதியென்றால் அவர் படை நடத்திய பிராந்தியத்தில் போராளிகளோடும் மக்களோடும் நெருக்கமாகப் பழகியிருப்பார். புலம்பெயர் நாட்டில் பொறுப்பாளராக இருப்பவர் அந்தந்த நாடுகளில் உள்ள மக்கள் மத்தியில் தமக்கு நெருக்கமானவர் இவர் என உணர வைக்க வேண்டும். எஜமானத்தனம் இல்லாதவர்கள் மக்கள் மனதில் நிலைத்து நிற்பர். இதற்கு குலம் அண்ணா போன்றோர் எடுத்துக் காட்டு. அதேவேளை அங்கங்கே தோன்றும் சிக்கல்களை சாதுரியமாகக் கையாள வேண்டும். அப்படியானால் அனைத்துலக விடயங்களுக்கும் பொறுப்பாளராக விளங்குபவர் எத்தகையவராக இருக்க வேண்டும். அதனை செவ்வனே செய்தார் கிட்டு. அவர் ஒரு சீனியர் பல களங்களைக் கண்டவர். ஒரு மாவட்டத்தை வழிநடத்தியவர். வான்புலிகள் உருவாக்கத்துக்கான எண்ணக்கருவை உருவாக்கியவர், எழுத்தாற்றல் மிக்கவர், சிறந்த போட்டோகிராபர், நாட்டில் கிராம வளர்ச்சிக் கட்டமைப்பை உருவாக்கியவர், குறிப்பிடத்தக்க ஓவியர் என பல்வேறு விடயங்கள் அவருக்கு இருந்ததால் அவரது ஆளுமை மிகப்பெரியதாக இருந்தது. இதனால் புலம்பெயர் தேசங்களில் நவக்கிரகங்களாக நின்றோர் ஒரே திசையில் பயணிக்க வேண்டி வந்தது.

அவரது ஒவ்வொரு அசைவும் - செயற்பாடும் தனித்துவம் மிக்கதாக விளங்கியது. அதுபோலவே அவரது வீரச்சாவும் தனித்துவம் மிக்கதாக உலகில் அதிர்வை ஏற்படுத்தியது.



# குடும்பத்துக்கு ஒரு பட்ஜெட்

செலவைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க குடும்ப வரவு - செலவுத் திட்டம் போடுவது அவசியம். இப்படி பட்ஜெட் போடும்போது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இருப்பது கட்டாயம். அப்போதுதான் வரவு - செலவுத் திட்டம் சரியாகவும் முழுமையாகவும் இருக்கும்.

**1. பண வரவைக் கணக்கிடுதல்**

குடும்ப உறுப்பினர்களின் வருமானத்தை முதலில் பட்டியலிட வேண்டும். இந்தப் பட்டியலில் கைக்கு வரும் தொகையை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**2. நிதி இலக்குகளுக்கு பணம்**

பிள்ளைகளின் உயர்கல்வி, வெளிநாட்டுச் சுற்றுலா, சொந்த வீடு, கார் மற்றும் ஓய்வுக் காலத்துக்கான முதலீட்டுக்குத் தேவையான தொகையை ஒதுக்கி வைத்துவிட வேண்டும்.

**3. கடன் தவணை**

வீட்டுக் கடன், கார் கடன், தனிநபர் கடன் போன்றவற்றுக்கான தவணை தொகைக்குப் பணம் ஒதுக்க வேண்டும். பிள்ளைகளின் ஆண்டு கல்விக் கட்டணம், காப்பீடு ஆண்டு பிரீமியம் போன்றவற்றுக்கான தொகையை குடும்ப பட்ஜெட்டில் ஒதுக்கி, அந்தத் தொகையை வருமானம் தரும் பங்குச் சந்தை, நிலையான சேமிப்புக் கணக்கில் வைத்திருங்கள்.

**4. செலவுகளுக்கு தொகை**

கைபேசி, தொலைபேசி கட்டணங்கள், மின்சார கட்டணம், சினிமா, ஹோட்டலில் சாப்பிடுதல், மாதாந்தப் பொருட்களுக்கு எனத் தனித்தனியாக தொகையை ஒதுக்கவேண்டும். பழுதடையாத உணவுப் பொருட்களை மொத்தமாக வாங்கி வைத்தால் பணம் மிச்சமாகும்.

**5. கணக்கு வழக்குகளை சரி செய்தல்**

வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கும்போது, சில சமயங்களில் துண்டு விழும்: அதனைக் கூடியவரை தேவையில்லாத செலவுகளைக் குறைத்து ஈடுகட்ட முயல வேண்டும். உதாரணத்துக்கு, சினிமா, ஹோட்டல் சாப்பாடுகளை குறைத்துக் கொள்ளலாம். பற்றாக்குறையைச் சமாளிக்க முதலீட்டில் கை வைக்காதீர்கள்.

# வெற்றி மொழி: பில்கேட்ஸ்



1955 ஆம் ஆண்டு பிறந்த பில்கேட்ஸ் அமெரிக்காவைச் சேர்ந்த முதலீட்டாளர் - எழுத்தாளர் - கொடையாளர் மற்றும் புகழ்பெற்ற மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் முதன்மை நிறுவுநர். தலைவர், தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் தலைமை மென்பொருள் வல்லுநர் போன்ற பதவிகளை மைக்ரோசாப்டில் வகித்துள்ளார்.

தனது சிறுவயதிலேயே கணனியில் பெரிதும் ஈடுபாடு உடையவராக விளங்கினார். உலகின் பெரும் செல்வந்தர்கள் பட்டியலில் தொடர்ந்து பல ஆண்டுகளாக முதலிடத்தைப் பெற்றவர். கணனி துறையில் பெரும் புரட்சியை உருவாக்கி, உலக மக்களிடையே மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்திய சாதனையாளர்.

- வெற்றியைக் கொண்டாடுவது நல்லது, ஆனால் தோல்வியின் படிப்பினைகளை கவனத்தில் எடுத்துக் கொள்வது மிகவும் முக்கியம்.
- உங்களின் மிகவும் மகிழ்ச்சியற்ற வாடிக்கையாளர்களே, கற்றுக்கொள்வதற்கான உங்களின் மிக உயரிய ஆதாரம்.
- தொழில்நுட்பம் என்பது வெறும் கருவி மட்டுமே.

தடுத்தல் இல்லாத சிகிச்சை என்பது வெறுமனே நிலையற்றது.

- தகவல் தொழில்நுட்பமும் வணிகமும் தவிர்க்கமுடியாத பிணைப்புடன் இணைந்து வருகின்றன.
- கலைத்திறன் மற்றும் பொறியியல் இடையேயான ஒரு சிறந்த கலவையே மென்பொருள்.
- நம் மீதான கருத்துகளை தெரிவிக்கக் கூடிய நபர்கள் நம் அனைவருக்கும் தேவை. அதுவே நாம் எப்படி முன்னேறுகிறோம் என்பதாகும்.
- உங்களால் அதை நன்றாக செய்யமுடியாது என்றால், குறைந்தபட்சம் அதை பார்ப்பதற்கு நன்றாக இருக்கும்படி செய்யுங்கள்.
- இணையத்தளமே விளம்பரத்தின் எதிர்காலம்.
- நீங்கள் ஏழையாக பிறந்திருந்தால் அது உங்கள் தவறு அல்ல, ஆனால் நீங்கள் ஏழையாக இறந்தால் அது உங்கள் தவறு.
- அறிவைப் பெற்றிருப்பதனால் ஆற்றல் வருவதில்லை, அறிவைப் பகிர்ந்து கொள்வதாலேயே வருகிறது.
- வணிகம் என்பது சில விதிமுறைகளும் நிறைய ஆபத்துகளும் கொண்ட பண விளையாட்டு.

# பணம் சம்பாதிப்போமா...!

## செல்வம் சேர்க்கும் இரகசியம்

நாம் முதலீடு செய்வதன் முக்கிய நோக்கமே அதன்மூலம் சிறந்த வருமானத்தைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால், ஒவ்வொரு முதலீட்டிலிருந்து நமக்குக் கிடைக்கும் வருமானம் எவ்வளவு என்பதை நம்மால் துல்லியமாக அளந்து பார்க்க முடிவதில்லை. காரணம், சேமிப்பு அல்லது முதலீட்டின் மூலம் நமக்குக் கிடைக்கும் வருமானத்தை எப்படி அளப்பது என்று நமக்குத் தெரிவதில்லை. அதனால் எது சிறந்த வருமானம் என்று நம்மால் கண்டுபிடிக்க முடிவதில்லை. எனவே, இந்தப் புதிய தொடரில் முதலில் நமக்குக் கிடைக்கும் வருமானத்தைச் சரியாகக் கணக்கிடுவது எப்படி என்று பார்ப்போம்.

வருமானம் என்பது..?

நாம் நமது பணத்தை முதலீடு செய்யும்போது, குறிப்பிட்ட ஒரு தொகையோ அல்லது நமது முதலீட்டின் சதவிகித அடிப்படையிலோ வருமானமாக நமக்குத் திரும்பக் கிடைக்கும். அப்படிக் கிடைக்கும்




வருமானம் சரியாக எவ்வளவு என்று பார்க்க வேண்டும்.

நமது சேமிப்பின் ஒரு பகுதியை யாரோ ஒருவருக்குக் கடனாகக் கொடுக்கிறோம். அவர் அந்தக் கடனை முழுவதுமாகத் திரும்ப அடைக்கும் வரை ஒரு சிறிய தொகையை வட்டி போல நமக்கு அளித்து வருகிறார் என்று வைத்துக்கொள்வோம், அதுதான் நமக்கான வருமானம். அது ஒவ்வொரு மாதமும் கிடைக்கலாம் அல்லது ஒரே தவணையாகக் கொடுப்பதாகக்கூட இருக்கலாம். நமக்குக் கிடைத்த வருமானம் நல்ல வருமானம்தான் என்பதை எப்படித் தீர்மானிப்பது? இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் முன், நமக்கு அறிமுகமான சில வருமானங்களைப் பார்ப்போம்.

கலா தன் சேமிப்பு பணத்தை வங்கி ஒன்றில் நிலையான வைப்பில் போடுகிறார். அதற்கு, 7 வீதம் வட்டி கிடைப்பதாக வைத்துக்கொள்வோம். அதேபோன்று ராம் என்பவர் நிறுவனப் பங்குகளில் முதலீடு செய்கிறார். அதற்கு அவருக்கு அந்த நிறுவனம் 1.5 வீதம் ஈவுத் தொகை (dividend) அளிக்கிறது. மங்கை என்பவர் தங்கம் வாங்குகிறார். அதை அவர் விற்கும் வரை வருமானம் ஏதும் கிடைக்க வில்லை. சிவா என்பவர் தன்னுடைய 60 லட்சம் ரூபாய் மதிப்புள்ள வீட்டை வாடகைக்கு விட்டு, மாதம் ரூ.15,000 பெறுகிறார், அதாவது, வாடகை வருமானமாக 3 வீதம் கிடைக்கிறது. அருள் என்பவர் நிலம் ஒன்றை வாங்கி, அதை விற்கும் வரை இலாபம் எதையும் ஈட்டவில்லை.

மேற்கூறிய நபர்கள் ஈட்டிய வருமானத்தைச் சதவிகித அடிப்படையில் நாம் ஒப்பிட்டால், கலாவின் நிலையான வைப்பு மூலம் கிடைக்கும் வருமானம் சிறந்தது. மங்கை வாங்கிய தங்கமும், அருள் வாங்கிய நிலமும் மோசமானது என்ற முடிவுக்கு வருவோம். ஆனால், இங்கே நாம் சொல்ல வருவது அதுவல்ல. ஏன்?

(சம்பாதிப்போம்)



## ஆக்டிக் வட்டத்தில் ஆடம்பரம்!

பனிப்பாளங்களால் பெரும் கட்டடத்தை கட்டி எழுப்ப முடியுமா? முடியுமென்கிறது சுவீடன். அப்படி ஒரு ஹோட்டலை கட்டியெழுப்பியும் இருக்கின்றது. உலகின் முதலாவதும், மிகப் பெரியதுமான "ஐஸ் ஹோட்டல்" ஒன்றை சுவீடனில் திறந்திருக்கிறார்கள். ஆக்டிக் வட்டத்திலிருந்து 200 கி.மீ. வடக்காக, சுவீடனின் ஜூக்காஸ்ஜார்வி என்ற இடத்தில் இந்தக் ஹோட்டல் கட்டப்பட்டுள்ளது.

வருடத்தின் ஒவ்வொரு பனிக்காலத்திலும் முழுமையாகச் செயற்படக்கூடிய இந்த ஹோட்டல், பல தொன் எடை கொண்ட பனிப்பாளங்கள் மூலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பனிக்காலம் ஆரம்பித்த கையோடு, இங்கு இடம்பெறும் ஓவியக் கண்காட்சிக்கு, உலகளாவிய ரீதியாக ஓவியக் கலைஞர்கள் வரவழைக் கப்படுகிறார்கள். பனிப்பாளங்கள் மீதான இவர்கள் கைவண்ணம் பார்ப்போரைப் பரவசப்படுத்தும். ஆனால் வசந்த காலத்தில் எல்லாமே உருகி, பலரைக் கவலைக்கு உள்ளாக்கும். 2017இல், முதற் தடவையாக வருடம் முழுவதும் நிலைத்து நிற்கும் வகையில், இவர்கள் "பனி ஓவியங்கள்" மாற்றம் கண்டிருக்கின்றன. இந்த வருடம் இடம்பெறும் 28வது கண்காட்சிக்கு 11 உலக நாடுகளிலிருந்து, 28 கலைஞர்கள் வருகை தருகிறார்கள். "ஐஸ் ஹோட்டல் 365" என்ற புதுப் பெயரும் சூட்டப்பட்டுள்ளது.

**உருகும் பனிப்பாளங்களால் மனதை உருக வைக்கிறார்களோ?**

# அறுபதிலும் ஆசை வரும்



அறுபதிலும் ஆசை பிறப்பதானால், நிச்சயம் அதில் ஒரு கவர்ச்சி இருக்க வேண்டும். பார்ப்பவர் மனதை மயக்க வேண்டும். கறுப்பியோ சிவப்பியோ, உயரமோ, குள்ளமோ அறுபது வருடங்களாக, இவர் மீதுள்ள மோகம் இன்றுவரை குறையவே இல்லை என்கிறார்கள். யார் இவர்?

பார்பி என்ற பெயரால் உலகறிந்த பொம்மையைப் பற்றித்தான் சொல்ல வருகிறோம். 150 நாடுகளில் வருடா வருடம் சராசரி 150 மில்லியன் தொகை பார்பி பொம்மைகள் விற்பனையாவது சாதாரண சாதனையல்ல. இன்றைய நாட்களில் ஐந்து வருட காலத்தில் படுத்து விடும் நிறுவனங் களுக்கிடையே, 60 வருடங்களை வெற்றிகரமாக கடந்து, இன்றும் இளமை குலுங்க, நிமிர்ந்து நிற்கிறது பார்பி என்று பெருமையோடு சொல்கிறார் இந்த நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் நத்தன்.

ஒரு மக்டொனால்ட்ஸ் நிறுவனம் போல, ஒரு கோலா நிறுவனம்போல, கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் - 1959 மார்ச் மாதம் தொடக்கப்பட்ட இந்த நிறுவனம், இன்று வரையில் ஒரு பில்லியன் தொகைக்கு மேற்பட்ட பார்பி பொம்மைகளை விற்று விட்டதை இவர் நினைவுகூர்கிறார். இந்த நிறுவனத்தின் முதல்வருட அறிமுகத்தில் விற்ற பொம்மை களின் எண்ணிக்கை 300,000! நீல் ஆர்ம்ஸ்ரோங் சந்திரனில் காலடி எடுத்த வைத்த ஆண்டு 1969!. ஆனால் 1965இல் ஒரு விண்வெளிப் பயணியாக பார்பி சந்தைக்கு வந்தாள். 1968இல் கிறிஸ்டி என்ற பெயரில் ஒரு கறுப்பின பார்பி விற்பனைக்கு வந்திருக்கிறாள்.

இன்று அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் மாநகரில், சுமாராக 100 ஊழியர்களுடன், நவீன முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது இந்த 60வருட நிறுவனம். உருவத்தை கணனியில் வடிவமைப்பது, பொருத்தமான ஆடைகளைத் தெரிவது என்று ஒரு பொம்மையைச் செய்து முடிக்க 12 மாதங்கள் தொடக்கம் 18 மாதங்கள் வரை தேவைப்படுகிறதாம்.

**அறுபதிலும் இளமை அனைவருக்கும் கிடைப்பதில்லையே**

தொகுப்பு: - ஏ.ஜே.ஞானேந்திரன்

# மீனா அல்லது தங்கமா?


ஒரு ஏலவிற்பனையில் 278 கிலோ எடை கொண்ட ஒரு இராட்சத ரியூனா மீன் விற்ற விலை என்னவென்று தெரியுமா? 336.4 மில்லியன் யென் - நம் நாட்டு மதிப்பில் 56. 7 கோடி ரூபா.

புதுவருட தினமன்றுதான் இந்த சூடான வியாபாரம் நடந்தது. "ரியூனா கிங்" என்று தன்னை அழைத்துக் கொள்ளும் கியோஷி குமுறா என்பவர்தான் இந்த மீனை வாங்கியிருக்கின்றார். இதுவரையில், 2013ஆம் ஆண்டு 155 மில்லியன் யென்னுக்கு இந்த இன மீனை விற்ற தொகையே சாதனைத் தொகையாக இருந்து வந்தது. இப்பொழுது கிடைத்ததுள்ள தொகை அதன் இரட்டிப்பாகி, புதுச் சாதனை படைத்திருக்கின்றது.

இந்த ஏல விற்பனையை நடத்திய மீன் சந்தை உலகப் பிரசித்தமானது. இது உலகின் மிகப் பெரிய மீன் சந்தை. வருடாவருடம் பெருந்தொகை யான உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுத்து வருகின்றது. அது மாத்திரமல்ல பெரும் புள்ளிகள், ஐ.பி.எல். போட்டிக்கு வீரர்களைப் பெருவிலையில் வாங்குவதுபோல, அசத்தும் விலைகளில் பெரிய மீன்களை வாங்குவது இங்கு வழமை. 1935இல் பழைய இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சந்தை, நவீன வசதிகளுடன், புதிய இடத்தில், முன்னைய சந் தையை விடஇரு மடங்கு பெரியதாக இருப்பதும் கவனிக்கப்பட வேண்டியது.



**அட மீன் விவகாரம்தானே என்று அலட்சியப்படுத்தி விடாதீர்கள்..**



# திருவிழாத் திருமணங்கள்

திருமணமே உன்னதமான ஒரு வைபவம்தான். ஆனால் அதுவே ஒரு திருவிழாவாக மாறிவிட் டால். மகிழ்ச்சி கரை புரண்டோ டும் என்பதில் என்ன சந்தேகம்? இந்தோனேஷியாவின் தலை நகரான ஜகார்த்தா, டிசம்பர் 31ஆம் திகதியன்று, 500 தம்பதிகள் ஒருமித்து, மண முடிச்சிட்ட வைபவத்தை நடாத்தியிருக்கின்றது. நகர அரசு, இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. பொதுவாக இங்கு திருமண நற்சான்றிதழ்கள் பெற்றிராத ஏழைத் தம்பதியினருக்கே இந்தத் திருமண விழாவை அரசு ஏற்பாடு செய்திருந்தது.

சட்டரீதியான அங்கீகாரம் பெற்ற திருமணமாக மாறும்போது, அரசு வழங்கும் பல இலவச சலுகைகளை இவர்களால் பெறக்கூடியதாகி விடும். ரோகிலா என்பவர் திருமணமாகி, 4 வயதுப் பெண்பிள்ளைக்கு தாயாக இருந்தும், இப்பொழுதுதான் முதற்தடவையாக அவருக்கு அரச அங்கீகாரம் கிடைத்துள்ளது. பண நெருக்கடி காரணமாக இந்த ஜோடி இஸ்லாமிய மத முறைப்படி, இமாம் ஒருரின் வழிநடத்தலில், கணவன் மனைவியாக இணைந்து கொண்டார்களே ஒழிய, அரச அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. இந்தத் திருமண விழாவில், வயதில் கூடிய மாப்பிள்ளையாக 76 வயது ஆண் ஒருவரும், 65வயதில் ஒரு மணமகளும் இணைந்து கொண்டிருக்கிறார்கள். 19 வயது இளம் பெண் ஒருவரே, இந்த விழாவின் மிகச் சிறியவர்.

**திருமணங்களை அரசா, சொர்க்கமா நிர்ணயிக்கின்றது?**

## மனித வேட்டையில் தப்புமா...?

# உலகின் ஒரேயொரு அல்பினோ ஒராங்குட்டான்

உலகில் ஒராங்குட்டான் (Orangutan) குரங்கு வகைகள் குறைவாகத்தான் காணப்படுகின்றன. அவற்றில் மிகவும் அரிதான ஒராங்குட்டான்தான்அல்பா எனப் பெயரிடப்பட்டுள்ள அல்பினோ ஒராங்குட்டான். வெளிறிய நிறத்தில் இருப்பவர்களைக் குறிப்பதற்குத்தான் 'அல்பினோ' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவார்கள். இந்த ஒராங்குட்டானும் முழுக்க வெளிறிய நிறத்தில் இருப்பதால் அல்பினோ ஒராங்குட்டான் என அழைக்கப்படுகிறது. அல்பினோ ஒராங்குட்டான்கள் (Albino Orangutan) மிக மிக அரிதானவை. 10,000 ஒராங்குட்டான் குரங்கு களுக்கு ஒரே ஒரு அல்பினோ ஒராங்குட்டான் மட்டுமே இருக்கும்.



மனிதர்களுக்குத் தெரிந்த ஒரே ஒரு அல்பினோ ஒராங்குட்டான் இந்த அல்பா மட்டும்தான். அதிலும் அல்பா ஒரு பெண் அல்பினோ ஒராங்குட்டான். ஏறக்குறைய ஒரு வருடத்திற்கும் மேலாக அல்பா பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு நல்ல உடல்நிலையுடன் தற்போது மீண்டும் காட்டிற்குள் விடப்பட்டுள்ளது. புகிட் பகா புகிட் ரயா தேசிய பூங்கா (Bukit Baka Bukit Raya National Park) அமைந்துள்ள போர்னியோ காடுகளின் அடர்ந்த பகுதிக்குள்அல்பா விடப்பட்டுள்ளது.

சரி ஏன் அல்பாவைப் பிடித்துப் பாதுகாத்துக் கண்காணிக்க வேண்டும் என்ற கேள்வி எழுகிறதல்லவா? அதற்கான விடை மனிதர்களை இயற்கைக்கு எதிரானவர்களாக மாற்றியதில் இருந்து ஆரம்பிக்கிறது. ஆனால் அல்பாவின் கதையில் ஒரு வருடத்திற்கு முன்பு மட்டுமே நமக்குத் தெரிகிறது. போர்னியோ தீவின் சென்றல் கலிமண்டன் (Central Kalimantan) பகுதியின் ஒரு கிராமத்தில் செல்லப் பிராணி போன்று அல்பாவை கூண்டுக்குள் அடைத்து வைத்துள்ளனர். கடந்த வருடம் ஏப்ரம் மாதம் போர்னிடோ ஒராங்குட்டான் சர்வைவல் அறக்கட்டளையைச் (Borneo Orangutan Survival Foundation) சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அல்பாவைக் காப்பாற்றினர். அவர்கள் காப்பாற்றும்போது அல்பாவின் மூக்கைச் சுற்றி இரத்தம் உலர்ந்த நிலையில் இருந்துள்ளது. அப்போது அல்பாவின் மொத்தநிறை 8 கிலோ மட்டுமே. அதுமட்டுமில்லாமல் ஐந்து வயதான அல்பா மன அழுத்தம், நீர்ப்போக்கு, ஒட்டுண்ணி தொற்று, அதீதமான பசியின்மை போன்ற உடல்நல பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்தது. இதன் விளைவாக மங்கிய கண் பார்வை, குறைந்த கேட்கும் திறன், தோல் புற்றுநோய்க்கான அறிகுறிகளும் இருந்தன.

இவ்வளவு பாதிப்புகள் இருந்த காரணத்தால் அல்பாவிற்கு கடுமையான சிகிச்சையும் கண்காணிப்பும் தேவைப்பட்டது. காப்பாற்றிய சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வழங்கிய தொடர்ச்சியான சிகிச்சை மூலம் உடல்நலம் தேறியதுடன் அதன் நிறையும் மூன்று மடங்கு அதிகரித்தது. நயரு மென்டெங் ஒராங்குட்டான் மறுவாழ்வு மையத்தின் (Nyaru Menteng Orangutan Rehabilitation Center) மூலம் இந்த சிகிச்சைகள் செய்யப்பட்டன. இதெல்லாம் நடந்த பின்னரே அல்பா காட்டிற்குள் மீண்டும் விடப்பட்டது.

முதலில் அல்பாவிற்கு 12 ஏக்கர் அளவிலான தீவில் காட்டை உருவாகி அதில் விடவேண்டும் என்றுதான் தீர்மானித்திருந்தார் கள். ஏனென்றால் அல்பாவிற்கு இருந்த உடல்நலப் பிரச்சினைகள் மற்றும் புற்றுநோய் அறிகுறிகளும் தான் அதற்குக் காரணம். ஆனால் அரசின் இயற்கை வள பாதுகாப்புக் கழகம் (Natural Resources Conservation Agency) மற்றும் சில இயற்கை அமைப்புகள் அல்பாவை இயற்கையான காட்டிலேயே விட வேண்டும் எனக் கூறினர். மேலும் அல்பாவும் அதற்கு ஏற்றாற்போல் தன்னம்பிக்கையுடன் உடல்நலம் பெற ஆரம்பித்தாள். மற்ற ஒராங்குட்டான்களுடன் ஒப்பிட் டால் அல்பா பலமானவள் எனக் கூறும் அளவிற்கு அதன் உடல் முன்னேற்றம் சிகிச்சை அளித்தவர்களுக்கு நம்பிக்கை அளித்தது. அதனால்தான் அடர்காடுகளுக்குள் அல்பா விடப்பட்டாள் எனக் கூறுகிறார்கள். அல்பாவுடன் அதன் தோழியான கிகா (Kika) எனும் மற்றொரு ஒரங்குட்டானும் காட்டில் விடப்பட்டுள்ளது. சிகிச்சை மையத்திலேயே இருவரும் ஒன்றாக இருந்துள்ளனர். காட்டில் விடப்பட்டாலும் மின்னணு சாதனங்கள் மூலம் அல்பாவின் இடப்பெயர்ச்சிகள் கண்காணிக்கப்படும் எனவும் கூறுகின்றனர்.

ஆனால் உண்மையான அச்சுறுத் தல் இனித்தான் வரவிருக்கிறது. அந்த உண்மையான அச்சுறுத்த லும் மனிதர்கள்தான். இந்தோனே சியாவின் காடுகளில் வேட்டை யாடல் என்பது சாதாரணமாக இருந்து வருகிறது. முக்கியமாக ஒராங்குட்டான்களும் அதிகமாக வேட்டையாடப்பட்டுள்ளன. இதிலிருந்து அல்பா தப்பித்தாக வேண்டும். தேசிய பூங்கா மற்றும் இயற்கை பாதுகாப்பு நிறுவன ஆட்கள் வேட்டைகளைத் தடுப்பதற்கான ரோந்தில் உள்ளனர். ஆனால் அவர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. இந்தோனேசியாவைப் பொறுத்தவரை வேட்டையாடல் என்பது எளிதில் பணம் சம்பாதிக்கும் தொழில். ஏறக்குறைய இரண்டு கோடியே அறுபது இலட்சம் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கும் இந்தோனேசியாவில் வேட்டையாடல் தொழில் வளர்வது ஆச்சரியமில்லைதான்.

விலங்கு சந்தைகளைப் பொறுத்தவரையில் இந்தோனேசியாவின் உள்ளூர் சந்தைகளில் ஒராங்குட்டான் குரங்குகளுக்கு சில நூறு டொலர்கள் விலை கொடுக்கப்படுகிறது. அதிலும் ஒராங்குட்டானின் மண்டையோடு 70 டொலர்கள் வரை விற்கப்படுகிறது என உலக வனவிலங்கு நிதிய (World Wide Fund For Nature) கணக்கு சொல்கிறது. அதே போன்று இளம் ஒராங்குட்டான்கள் உயிருடன் கடத்தப்பட்டு கறுப்பு சந்தையில் செல்லப்பிராணிகளாக விற்கப்படுகின்றன.

சிம்பன்சி மற்றும் கொரில்லா போன்ற மனிதக்குரங்கு வகைகளைச் சேர்ந்த இந்த ஒராங்குட்டான் குரங்குகள் இந்தோனேசியா மற்றும் மலேசியர்வில்தான் காணப்படுகின்றன. அதிலும் இந்தோனேசியாவில் உள்ள போர்னியோ ஒராங்குட்டான்கள் அழிந்து வரும் இனமாக 2016 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.

இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் (International Union for Conservation of Nature) தரவுகளின்படி கடந்த இருபது ஆண்டுகளில் 2,88,500 ஒராங்குட்டான்களில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஒராங்குட்டான்கள் அழிந்துவிட் டன. வேட்டையாடல் போதாதென்று இந்தோனேசிய அரசே பாம் எண்ணெய் எடுப்பதற்காகவும் இன்னும் சில வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் காடுகளை அழிக்கிறது. இதனால் காடுகளின் உயிரினங்கள் மனிதர்களுடன் போராட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலை இப்படியே தொடர்ந்தால் 2080 ஆம் ஆண்டில் 80 வீதமான ஒராங்குட்டான்கள் அழிந்துவிடும் என இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரங்குட்டான் மையத்தின் கேத்தி ஸ்மித் (Cathy Smith) கூறியுள்ளார்.

ஒராங்குட்டான்களுக்கும் மற்ற விலங்குகளுக்கும் இவ்வளவு பாதிப்புகள் இருந்தாலும் ஒரேயொரு அல்பினோ ஒராங்குட்டானான அல்பா காப்பாற்றப்பட்டதை சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் பலரும் கொண்டாடுகின்றனர். அல்பா அடைபட்டுக் கிடந்த கூண்டுகள் திறந்தபோது கொஞ்சம் தாமதித்து சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு அவ்வளவு பெரிய மரங்களுக்குள் வேகமாய் ஏறி மறைந்துபோன அல்பாவின் மகிழ்ச்சி அந்த காடுகளுக்குள்தான் இருக்கிறது. அல்பாவைப் போன்ற பல்வேறு ஒராங்குட்டான்களையும் விலங்குகளையும் காப்பாற்ற, காடுகளைக் காப்பாற்ற வேண்டும். ●



# ஏத்து

விவசாய செய்கையின் போது நீர் இறைக்க பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகும்.

தற்போது இதற்கு மாற்றிடாக நீர்ப்பம்பிகள் பயன்படுத் தப்படுகின்றன. இதனால், இதன் பாவனை மிக மிக அரிதாகவே உள்ளது. எனினும் ஏத்து அக்காலத்தில் காணப்பட்ட வியக்கத்தக்க தொழிநுட்ப பொறிமுறையாகும்.



# அம்மானைக் காய்

அம்மானைக் காய் என்பது பழந்தமிழ் மகளிர் விளையாடும் ஒரு விளையாட்டுப் பொருள். ஆண்கள் விளையாடுவதற்குப் பந்தைப் பயன்படுவதைப்போல பெண்கள் விளையாட அம்மானைக் காயைப் பயன்படுத்தினர்.

சிலப்பதிகரத்தில் கண்ணகி அம்மானை காய் விளையாடுவது பற்றிய குறிப்புகள் உண்டு. இன்றும் அனேக கண்ணகி அம்மன் ஆலயங்களில் அம்மானைக் காயைக் காணலாம். அங்கு இது புனிதத் தன்மைகொண்ட சடங்குப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது.

அம்மானைக் காயில் மணிகள் காணப்படும். அதிலிருந்து ஒருவித ஒலியும் ஏற்படுகின்றது. மேலும், இவ் அம்மானைக்காய் விளையாட்டுப் பற்றி திருவாசகத்தில் திருவம்மானை எனும் பகுதியில் '... அம்கணன் அந்தணன் ஆய் அறைகூவி வீடு அருளும் அம்கருணை வார்கழலே பாடுதும்காண் அம்மானாய்"


பொருள் : "... ஞானக் கண்ணுடைய அந்தணன் அவன். அறிய கருணையுடைய அவன் என்னை வழியக் கூவியழைத்து வீடு பேறு அளித்தருளினன். அவனைக் குறித்து நாம் பாடி அம்மானை விளையாடுவோமாக. ...." என சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# பூட்டுச் செம்பு

இறுக்கமாகப் பூட்டிப் பாவிக்கக் கூடியதாக இருந்ததால் பூட்டுச் செம்பு எனவும் தூக்கும் கைப்பிடியைக் கொண்டு செம்பு வகையைச் சார்ந்திருந்ததால் தூக்குச் செம்பெனவும் அழைக்கப்பட்டது. இதனை தென்னிந்தியப் பண்பாட்டுக்குரியோர் கூஜா என அழைப்பர் என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி குறிப்பிடுகிறது.


பித்தளையால் ஆன செம்பு இனத்தைச் சேர்ந்த பூட்டுச் செம்பு மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது. செம்பு (அடிப்பகுதி), குவளை, மூடி என்பவையே அவையாகும். செம்பின் வாய் பகுதியோடு உள்ளார்ந்து இணைக்கத்தக்க விதமாக குடிக்கும் குவளையை உள்ளடக்கி அது வெளியே தெரியாத விதமாகவும் வெளியே திரவ பதார்த்தங்கள் சிந்தாத விதமாகவும் 7- 8 புரிகள் கொண்ட மூடி அமைந்திருப்பது இதன் சிறப்பம்சம்.

தற்போது வழக்கொழிந்து போய் விட்ட பூட்டுச் செம்பு பயணங்களும் வசதிகளும் தற்போதயைப் போல இலகுவற்றிருந்த காலங்களில் தம் நீண்ட வழிப்பயணத்துக்காக பானங்களை எடுத்துச் செல்ல பயன்பட்டது. பானங்கள் ஒன்றோடு ஒன்று கலக்காத வகையிலும் அதேநேரம் வெளித்தெரியாத




வகையிலும் தூக்கிச் செல்ல இலகுவான முறையிலும் தனித்துவமான வடிவிலும் அமைந்த இவ் வகைச் பூட்டுச் செம்பு பழந் தமிழரின் வாழ்க்கைத் தரத்தையும் நுட்பத் திறனையும் ரசனை உணர்வையும் ஒருங்கே வெளிப்படுத்தி நிற்பன.

# சில்லுக்களி



சில்லுக்களி என்பது தமிழர் பாரம் பரியத்தில் முக்கிய இடம்பிடித்த உணவாகும். ஈழத்தில் ஆடிப் பிறப்பு நாளில் கூழுடன் அல்லது கூழுக்கு பதிலாக இந்த உணவும் தவறாது இடம்பிடித்தது.

யாழ்ப்பாணத்தின் மயிலிட்டி, வடமராட்சிப் பகுதிகளில் செய்யப்படும் சில்லுக்களிக்கு தனி மவுசு உண்டு.

**தேவையானவை:**

வறுத்து அரைத்த உளுத்தம் மா - அரை கப்

சிவப்பு அரிசி மா - ஒரு கப்

வறுத்த பாசிப்பருப்பு - கால் கப்

தேங்காய்ப்பால் - அரை லீற்றர்.

சீனி - 250 கிராம்.

உப்பு - தேவையான அளவு

**செய்முறை:**

ஒரு பாத்திரத்தில் உளுத்தம் மா, அரிசி மா, 50 கிராம் சீனி, தேவையான அளவு உப்பு போட்டு, அதில் இளஞ்சூடான தண்ணீரை ஊற்றி, புட்டு மா பதத்துக்குப் பிசைந்து கொள்ளவும் இதனை, சுண்டைக்காய் அளவு சிறுசிறு உருண்டை களாக உள்ளங்கையில் வைத்து, உருட்டி, விரலால் சிறு தட்டு போன்று அழுத்திக் கொள்ளவும் இப்படி அழுத்திய வடிவத்தை எல்லாம் இட்டலி தட்டில் வைத்து, 10 நிமிடம் வேக வைத்து, தனியாக எடுத்து வைத்துக் கொள்ளவும்.

அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்து, தண்ணீர் ஊற்றி சூடானதும், வறுத்த பச்சைப் பயறை அதில் சேர்த்து, வேக வைத்துக் கொள்ளவும். பாசிப்பருப்பு வெந்ததும், அந்தப் பாத்திரத்திலேயே அரை லீற்றர் பாலையும், மீதி 200 கிராம் சீனியையும் சேர்த்து, நன்கு கொதிக்க விடவும். அவை கொதித்ததும் வேக வைத்த சில்லுகளைச் சேர்த்து மூன்று நிமிடம் கழித்து, இறக்கி சூடாகப் பரிமாறவும்.

# வீட்டுத் தோட்டம்: உணவுக்கு மட்டுமல்ல உடலுக்கும் நல்லது



விவசாயப் புரட்சி என்ற பெயரில் நாட்டுக்குள் நுழைந்த இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள் மூலம் நஞ்சு சேர்ந்த உணவையே நாம் உண்கிறோம். இதனால் பல நோய்களை சுமந்து வேதனைகளையும் வலிகளையும் அனுபவிக்கிறோம். கூடவே மருத்துவத்துக்கு எனப் பெருந் தொகை பணத்தையும் செலவு செய்கிறோம்.

இயற்கையில் விளைந்த மரக்கறிகளை இதற்குத் தீர்வு. இயற்கை உணவுகளைப் பெற வீட்டுத் தோட்டம் அமைப்பதே சிறந்தது. வீட்டுத் தோட்டத்தால் நல்ல தரமான மரக்கறிகள் மட்டுமல்ல, ஆரோக்கியம், உற்சாகம், பண சேமிப்பும் கிட்டுகிறது.

வீட்டுத் தோட்டம் அமைக்க வெயில் படும் இடத்தைத் தெரிவு செய்யுங்கள், மாடி வீட்டில் இருப்பவர்களும் மாடியில் ஒரு பகுதியைத் தெரிவு செய்யலாம்.

நிலத்தை ஒதுக்கியவர்கள் அதனைக் கொத்தி உரமாக இலை, எருவைப் போட்டு மீண்டும் கொத்தவும். மாடி வீட்டைத் தெரிவு செய்தவர்கள் உர, சாக்கு பைகள், சாடி, வாளிகளில் மண், உரம் போட்டு தேர்வு செய்த விதைகளை பஞ்ச கவ்யா கலந்த நீரில் ஒருநாள் ஊற வைத்து விதைத்தால் நோய் தாக்குதல் இன்றி விதைகள் செழிப்பாக முளைக்கும்.

கீரை போன்ற விதைகளை நடும்போது மணல் அல்லது வேப்பம் புண்ணாக்கு கலந்து தூவ வேண்டும். பைகளில் விதைகளை நடும்போது விதையின் அளவை விட ஐந்து மடங்கு ஆழத்தில் - 1 அல்லது 2 அங்குல ஆழத்தில் நட வேண்டும்.

விதைகள் முளைக்கும் பருவத்தில் பூவாளியால் தண்ணீர் விட வேண்டும். செடிகள், சூரிய ஒளி படும் தன்மைக்கு ஏற்ப தண்ணீர் விட வேண்டும். சாதாரணமாக ஒன்றுவிட்ட ஒருநாள் நீர் ஊற்றினால் போதுமானது. காலை 8 மணிக்கு முன்பாகவும் மாலை 5 மணிக்குப் பின்பாகவும் நீர் விடுவதே சரியானது. மதிய நேரங்களில் நீர் விடுவதை கட்டாயம் தவிர்க்க வேண்டும்.

கொடி வகைகளை நடும்போது தடிகளை ஊன்றி நடவேண்டும். நுனியில் நூல் கட்டி பந்தல் அமைத்து படர்வதற்கு வசதியாக ஏற்ற வேண்டும்.


15 நாட்களுக்கு ஒருமுறை உரமிடுவதுடன் பஞ்சகவ்யாவை இலைகளின் மேல் தெளித்து பயிர்களுக்கு ஊட்டம் கொடுப்பது அவசியம்.

பூச்சி, நோய் தாக்கங்களை தடுக்க அக்னி அஸ்திரம் கலந்து தெளிக்கலாம். அல்லது ஒரு லீற்றர் தண்ணீருக்கு 10 மில்லி வேப்பம் எண்ணெய் கலந்தும் தெளிக்கலாம். பூச்சி தாக்கத்தைக் கட்டுப்படுத்த ஒளிதரும் மஞ்சள் நிறப் பொருளை தோட்டத்தின் நடுவில் வைக்கலாம்.

வீட்டுத் தோட்டத்தில் அனைத்துவகை மரக்கறிகளையும் வைக்கலாம். ஆனால் கீரை வகைகள், கரட், கத்தரி, தக்காளி, மிளகாய், பீற்றூட், வெண்டி போன்றவற்றை இலகுவாக உற்பபத்தி செய்ய முடியும்.

இயற்கைக்கு வழி

## அக்னி அஸ்திரம்



விவசாயத்தில் பூச்சி தாக்கங்களே அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது. இயற்கை வழியில் பூச்சி தாக்கங்களை கட்டுப்படுத்த அக்னி அஸ்திரம் பயன்படுத்தப்படுகின்றது.

**தேவையான பொருட்கள்**

பசுமாட்டு சிறுநீர் - 7 லீற்றர்
புகையிலை - 250 கிராம்
பூண்டு (உள்ளி) - 250 கிராம்
பச்சை மிளகாய் - 250 கிராம்
வேப்பம் இலை - 2 கிலோ 500 கிராம்

**தயாரிப்பு முறை**

பசு மாட்டின் சிறுநீர் (கோமியம்), புகையிலை, பச்சை மிளகாய், பூண்டு, வேப்பம் இலைகளை மண்பானையில் போட்டு நன்றாகக் கொதிக்க வைக்க வேண்டும். பின்னர் இறக்கி ஆறவைத்த பின்னர் மீண்டும் கொதிக்க வைக்க வேண்டும். இவ்வாறு நான்கு தடவைகள் செய்ய வேண்டும். வேறு பானை மாற்றக்கூடாது. இறுதியாக இறக்கிய பிறகு பானையின் வாயைத் துணியால் கட்டி இரு நாட்கள் அப்படியே வைக்க வேண்டும். இறக்கிய பின், நீரின் மேல் ஆடைபோல் படியும் அதை நீக்கி விடுங்கள். அதன் கீழ் உள்ள தெளிந்த நீர்தான் அக்னி அஸ்திரம். இதனை 3 மாதங்கள் வரை சேமித்து வைத்திருக்க முடியும்.

**பாவனை முறை**

30 லீற்றர் தண்ணீரில், ஒரு லீற்றர் அக்னி அஸ்திரம், ஒரு லீற்றர் கோமியம் கலந்து பயிர்கள் மீது தெளித்தால் பூச்சி, புழுக்கள் காணாமல் போய்விடும். அனைத்து வகை பயிர்களுக்கும் இதனைத் தெளிக்க முடியும்.

## யாழ்ப்பாணத்தில் இயற்கை மரக்கறிகள்

கிருமி நாசினி, செயற்கை உரம் என இரசாயனக் கலப்பற்ற மரக்கறிகளைப் பெறுவதென்பது அரிதாகிவிட்டது. அதையும் மீறிக் கிடைக்கும் மரக்கறிகள் உண்மையில் இயற்கையில் விளைந்தவையா? அப்படியானால் அதை எவ்வாறு இனங்காண்பது என்ற சந்தேகம் மக்களுக்கு எழுவது இயல்பு.

இயற்கையில் விளைந்த மரக்கறிகளைப் பெறுவதற்கு நம்பிக்கைதான் முதன்மையாக உள்ளது. இவ்வாறு நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இயற்கை வழி இயக்கத்தின் வாராந்த அங்காடி செயற்படுகின்றது. யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக சிங்கர் பிளஸ் காட்சியறை அருகை இந்த அங்காடி செயற்பட்டு வருகின்றது.

வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 3 மணி தொடக்கம் 5.30 மணிவரை கூடும் இந்த அங்காடியில் இயற்கையில் விளைந்த பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.




ஏர் பின்னது உலகம்



## இயற்கைக்கு வரும் அமெரிக்க விவசாயிகள்

வளர்ந்து வரும் உணவு உற்பத்தி நிறுவனங்களால் உலக நாடுகளின் சிறு விவசாயிகளின் விளைபொருள் விற்பனை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான சிறு விவசாயிகள் தங்கள் பகுதிகளின் மக்களிடமே அவற்றை விற்பனை செய்கின்றனர். இதேபோல் அமெரிக்காவின் இலினியாஸ் மாகாண மக்களும் தங்கள் பகுதியினருக்கு மட்டுமே தங்கள் உற்பத்தியை விற்பனை செய்தார்கள்.

பல பெருநிறுவனங்கள் விவசாய உற்பத்திகளில் அதிக கவனம் செலுத்துகின்றன. இவ்வாறான நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட அமெரிக்க சிறுவிவசாயிகள் பலர் இயற்கை விவசாயத்துக்கு மாறியுள்ளனர். இதன் மூலம் பெருநிறுவனங்களுக்கு செல்லும் வாடிக்கையாளர்களை தம்பக்கம் ஈர்க்க முடியும் என அவர்கள் நம்புகின்றனர். இதனால் பலர் இயற்கை விவசாயத்தை கையிலெடுத்துள்ளனர்.

# ஆரிட்டை சொல்லி அழ?



## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

## குரேக்கு ஆப்பு

சத்தியம் பண்ணி மண்டாடின வர்தான் குரே, ஆனால் அது எடுபடேல்லை..

உது சரிவாற விசியமாத் தெரியேல்லை. போன குரேக்குப் பதிலா வடக்கு ஆளுநரா ஒரு தமிழர் வந்திருக்கிறார்? அவரைப் பாக்க அவரின்ரை பேச்சைக் கேக்க நல்லா இருக்கிது. அவரைப் பாக்க நினைச்சதைச் செய்வர் போலக் கிடக்கு. வந்த அண்டே சொல்லிப் போட்டார் எல்லா இடங்களிலும் தமிழ் போட்டும் சிங்கள போட்டும் கட்டாயம் இருக்க வேணும் எண்டு. விரும்பினால் இங்கிலீசும் போடலாம் எண்டு சொன்னவர். அடுத்ததா போட்ட போடுதான் சரியான போடு. வட மாகாணத்தை ஒரு முன்மாதிரியான மாகாணமா ஆக்கிறதுதான் தன்ரை முழு நோக்கம் எண்டு. காற்சட்டை போட்டு ரையும் கட்டின அதிகாரியள்தான் அங்கை கனக்க வந்தவை. தனக்குக் கண்ணிலை காட்டக் கூடாத சமான் என்னெண்டால் ஊழலும் லஞ்சமும் எண்டும் சொல்லி ஊழல் லஞ்சம் இல்லாத ஒரு வட மாகாணத்தைக் காணுறதுதான் தன்ரை கனவெண்டும் சொல்லுறார். ஆனால் வந்திருந்தவையிலை கொஞ்சப் போர் தங்கடை கொடுப்புக்கை சிரிச்சவை. அவை ஏன் சிரிச்சவை எண்டு எனக்குத் தெரியேல்லை. அவர் உண்மையாகவும் முழுமனதோடையும் விசியங்களைச் செய்யலாம்.

ஆனால் அதுக்கு தவராசா சொன்னமாதிரி எங்கடையளும் ஒத்துழைக்க வேணுமெல்லே? தவராசா சொன்ன தெண்டதுக்காகச் சொல்லேல்லை. தவராசா ஒரு வெறுவாய்ப்பாட்டி எண்டதாலை அவரைக் கணக்கெடுக்கப் பிடாது.

ஒரு தமிழ் பேரை முகமூடியாப் போட்டுக் கொண்டு ஒரு பௌத்த சிந்தனைவாதி வந்திருக்கிறார்...? எண்டு சிலர் கதைச்சவை. அதையும் பாப்பமன்?

மைத்திரி உவரை வைச்சு மடக்கிப்போடலாம் எண்டுதான் உவரை அனுப்பனவராம். உப்பிடி எங்களை மடக்கிப் போடுவம் எண்டு அவர் நினைச் சால் அவர்தான் தோற்பர். கலை கலாசாரத்திலையோ, பண்பாட்டிலையோ, இல்லை வடக்கு நிர்வாகம் சீராக நடக்க வேணும் எண்டதிலையோ அக்கறை இருக்கிறமாதிரித்தான் புதுக் கவர்னரும் கதைச்சவர். என்னெண்டாலும் நாங்கள் எல்லா ரும் சேந்து அவருக்கு எங்கடை சப்போட்டைக் குடுக்க வேணும். அதுதான் எங்கடை கடமை.

மைத்திரியைப் பாத்துத்தான் நான் கேக்கிறன். எட எங்கடை வாக்குகளை வேண்டிக் கொண்டுதானே இப்ப நீங்கள் இருக்கிற ஜனாதிபதி சீற்றைப் பிடிச்சனியள். அதைப் பிடிச்சு வைச்சுக் கொண்டு எப்பிடி உங்களாலை எங்களுக்கே ஆப்பு வைக்க ஏலுது? நீங்கள் தோழர் சண்முகதாசனிட்டை கொம்யூனிஸ்ட் கட்சி பற்றிப் படிச்சனியள். அப்ப கொஞ்ச நஞ்ச கம்ளூனிஸ்ட் சிந்தனையாவது நெஞ்சிலை இருக்க வேணும்? நான் நினைக்கிறன் அப்பிடிப்பட்ட சிந்தனைவாதியள் எல்லாரும் பொதுவுடமை பற்றித்தான் சிந்தித்திருக்கினமே ஒழிய சிறுபான்மை இனத்தைப் போட்டுக் காலுக்கை உழக்கச் சொல்லிச் சொல்லேல்லை. இது நீங்கள் என்னடா எண்டா. சிறுபான்மைக் கெதிராக் கதைக்கிறியள். புத்த சமயத்தை மட்டும் வளக்க வேணும் எண்டு சொல்லுறியள். இனத்துவேசத்தை இரத்தம் இராதமாக் கக்கிறியள்.இதை விட வேறை எங்களுக்கு எதிராச் செய்ய என்ன கிடக்கு, உது ஞாயமோ?

என்னைப் பொறுத்தவரை சந்திரிகா இரண்டு பிழையை எங்களுக்கு விட்டிருக்கிறா. ஒண்டு தான் ஜனாதிபதியா இருக்கேக்கை ரணிலின்ரை அரசாங்கத்தைக் கலைச்சுப் புலியளோடை சண்டையைத் துவங்கினது. அதை அவவே தான் பிழை விட்டிட்டனெண்டு அழாக் குறையாச் சொல்லித் துன்பப் பட்டவ. பிறகு இப்ப உங்களை ஜனாதிபதியாக்கிப் போட்டுத் துன்பப்படுறா எண்டு கேள்வி.

இப்ப ஆளுநராகக் கொண்டு வந்தவரை அவற்றை இஸ்டத்துக்கு நடக்க விடுங்கோ. நீங்கள் சொன்ன தைச் செய்யிற கிளிப்பிள்ளைமாதிரி அவரை வைச்சிருக்காதையுங்கோ. நீதியும் நியாயமுமாக அவர் நடந்தால் கட்டாயம் அவருக்கு பொதுசனம் உதவி செய்யும் எண்டது என்ரை கணிப்பு.

இனியும் ஒண்டுக்கை இரண்டு எண்டு நில்லாதையுங்கோ. இதுவரை நாங்கள் மீட்சி இல்லாமல்தான் சீவிக்கிறம். . எங்களுக்கு எண்டு ஒரு ஆட்சியைத் தந்திட்டு இதுக்கை தங்கடை ஆக்களையும் தங்களுக்குச் சார்பான ஆக்களையும் விட்டுத் தடி ஓட்டினால் எப்பிடி நாங்கள் நிம்மதியாச் சீவிக்கலாம்? இதைவிடக் குரே பராவாயில்லை எண்டு நினைக்கிறமாதிரி புதுசா வந்தவர் காரியத்தைச் செய்யப் பிடாது..! இப்பவும் குரேதான் வேணுமெண்டு கொஞ்சப் பேர் போராட்டம் நடத்தினவையாம். அது வேணுமெண்டு ஆக்களை வைச்சுச் செய்ததவையாம்.

குரேயும் தான் திரும்பி வந்திடுவம் எண்டிட்டு எத்தினை சத்தியம்? எத்தினை மன்னிப்பு? எத்தினை குத்தி முறிவு? எண்டு செய்து பாத்தவர். மைத்திரி மசியேல்லை. மைத்திரிக்கு இப்ப மஹிந்தாதான் தெய்வமும் தேவவாக்கும் போலை கிடக்கு.இப்பிடி நிலைமை தலை கீழாப் போய்க் கிடக்கிறதை ஆரிட்டைச் சொல்லி அழ?

- கோளரங்கன்

---

## வடக்கின்....

(06ஆம் பக்கத் பார்க்க)

அதையடுத்து ஆட்சித் தரப்பி னரும் ஒருவர் பின் ஒருவராக படை யெடுக்க ஆரம்பித்துவிட்டனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளைச் சந்தித்து உலர் உணவு உட்பட சகல உதவிகளை யும் வழங்கவிரும்பும்படியும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்பத்துக்கு பத்தாயிரம் ரூபா வீதம் வழங்கும்படியும் பணித்துள்ளார்.

அதையடுத்து நிதியமைச்சர் தலதா அத்துக்கோறளவும் வந்து மக்களைச் சந்தத்தார். அவரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா அரசியல் கைதிகளை விடுவிக்கும்படி கோரியபோதுதான் ஒரு குழுவை அமைத்து நடவடிக்கை எடுக்கப்போவதாகத் தெரிவித்தார் ஆனால் அவர் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை அனைவரும் பயங்கரக் குற்றவாளிகளே எனத் தெற்கில் அடிக்கடி கூறி வருபவர் என்பதை மறுத்துவிட முடியாது,

அதேவேளை, சபாநாயகர் கரு ஜெயசூரியாவும் கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கு விஜயம் செய்துள்ளார்.

விவசாய அமைச்சர் ஹரிசன், விவசாயிகளைச் சந்தித்து பாதிக்கப் பட்ட ஒருவருக்கு நாற்பதினாயிரம் வழங்கப்போவதாகக் கூறிய அதே வேளையில் தன்னுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒத்துழைக்க வில்லையென கவலை தெரிவித்தார்.

எப்படியிருந்தபோதிலும் நாமல் ராஜபக்ஷ முதற்கொண்டு அரசாங்கத் தரப்பினர் வரை பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் கண்ணீர் விட்டதுடன் ஆபத்தில் கைகொடுக்கும் உற்ற நண்பர்களாகவும் காட்ட முயன்றுள்ளனர்.

இனி இப்படி ஒரு பேரழிவு ஏற்படாமல் தடுப்பது எப்படி என எவருமே வாய் திறக்கவில்லை, அக்கறைப்படவும்மில்லை. தேர்தல் நெருக்கிவரும் சமயங்களில் தென்னிலங்கை அரசியல்வாதிகளை தமது தேவைகளுக்காக ஆபத்பாந்தவர் களாக மாறுவதும், அதன்பின் வழக்க மான ஒடுக்குமுறைகளைத் தொடர்வதும் அப்படி ஒன்றும் அதிசயமல்ல. அதுதான் காலங்காலமாக மேற்கொள்ளப்படும் வடக்கை நோக்கிய அரசியல்.

---

## நட்சத்திரப் பாட்டிகள்



கதை சொல்லும் பாட்டிகள்
வாய்க்காத பிள்ளைகள்
ஒதுக்கப்பட்ட தனியறையில்
கைப்பேசியில் விளையாடுகிறார்கள்.

சலித்த பொழுதில்
ஆளுயர டெடிபியரைக் கட்டிக்கொண்டு
கதை சொல்கிறார்கள்.

வெயிலோடு சினேகம் கொண்டு
வெளியில் சுதந்திரமாய் விளையாடும்
சக தோழர்களின்
உற்சாகக் குரல்களைக் கேட்டமாத்திரத்தில்
ஓட்டுக்குள் நத்தையெனச் சுருங்குகிறார்கள்.

தோட்டத்தில் பறக்கும் வண்ணத்துப்பூச்சிகள்
இவர்கள் நெஞ்சங்களிலும்
கொஞ்சம் மகிழ்ச்சி வண்ணத்தை
மிருதுவாய்த் தடவிவிட்டுப் போகின்றன.

இரவு மொட்டைமாடியில்
வானத்தை வெறித்தபடி
பரிதாபமாய்ப் பார்த்துப்
படியிறங்கும் அவர்களின்
ஏக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு
நிலவு இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு
இறங்கிவரும் நட்சத்திரப் பாட்டிகள்
கனவில் தங்கள் மடியமர்த்திக்
கதை சொல்லத் தொடங்குகிறார்கள்.

- தமிழ்த்தென்றல்

நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு

59

நன்றி தமிழ்லீடர் – அவுஸ்ரேலியா



"அப்பா பாயை விரிக்கிறன், உள்ளை வந்து படுங்கோ", என்று விட்டு அவள் மெல்லப் பெருமாளைப் பிடித்து எழுப்பி விட்டாள்.

"வேண்டாம் பிள்ளை... நான் கொஞ்ச நேரம் அந்த மரத்தோடை போய்ச் சாய்ஞ்சு கொண்டு இருக்கப் போறன்", என்று விட்டு அந்த மாமரத்தை நோக்கி நடந்தார் பெருமாள்.

இப்போ பார்வதிக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தடுமாறினாள் முத்தம்மா. தான் அவளிடம் எதையாவது சொல்லி சமாளிக்காவிட்டால் அவள் சுந்தரத்திடம் ஏதாவது கேட்க, அவன் எதையாவது சொல்லி வைக்க, பின்பு பெரும் பிரச்சினையாகி விடுமென்றே முத்தம்மா கருதினாள்.

அவள் தயங்கியவாறே பார்வதியின் குடிசைக்குப் போனாள். பார்வதி இரவு சமையலுக்கு அரிசி புடைக்க ஆரம்பித்திருந்தாள். அவளின் அருகில் போய்க் குந்தினாள் முத்தம்மா.

பார்வதி சுற்றிவளைக்காமலே நேரடியாகக் கேட்டாள், "ஏன், ஏனடி அழுதனீ.. என்ன நடந்தது?"

முத்தம்மா சில விநாடிகள் எதுவும் பேசவில்லை. பின்பு மெல்லிய தயக்கத்துடன், "நாங்கள் போராளி குடும்பம் இல்லையாம். கட்டாயம் நான் இயக்கத்துக்குப் போகவேணுமாம் அதாலை.." என்றுவிட்டு அவள் இடைநிறுத்தினாள்.

"அதாலை..?"

"என்னைக் கலியாணம் செய்யட்டாம்",

"மாப்பிள்ளை பாத்திட்டானாமே?", என்றாள்.

முத்தம்மா அந்தக் கேள்வியில் தடுமாறியே போனாள். எனினும் ஒருவாறு சமாளித்தவளாக ஒரு பொய்யைச் சொல்லிவைத்தாள்.

"அதைப் பற்றி ஒண்டும் சொல்லேல்ல"

பார்வதி புடைத்தெடுத்த அரிசியை அரிக்கன் சட்டியில் கொட்டிவிட்டு, "அவன் விஷயமில்லாமல் சொல்லமாட்டான். ஆரையோ பாத்திட்டான் போலை. உவன் எப்பவும் உங்கடை குடும்பத்திலை வலு அக்கறை", என்றாள்.

"அவர்தான் அந்த மாப்பிள்ளை", எனக் கத்தவேண்டும் போலிருந்தாலும் முத்தம்மா மிகச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். பார்வதி தொடர்ந்தாள், "வயது வந்தால் பொம்பிளைப் பிள்ளையள் கலியாணம் கட்டத்தானே வேணும்", அதுக்கேன் அழுறாய்?"

"அது.. அது..", எனத் தடுமாற்றத்துடன் இழுத்த முத்தம்மா, 'இப்பிடி... இடம்விட்டு இடமாய் ஓடிக்கொண்டிருக்கேக்க கலியாணம் எண்டு நினைச்சாலே வெறுப்பாய்க் கிடக்குது", என்றாள்.

"நாட்டு நிலைமை இண்டைக்கு ஒரு மாதிரி இருக்கும். நாளைக்கு வேற மாதிரி இருக்கும், அதுக்காகக் கலியாணம் கட்டாமல், பிள்ளை பெறாமல் இருக்கலாமே?"

"எப்படியெண்டாலும்..."

"நீ சும்மா இரு.. நானே அவனிட்ட சொல்லி எல்லா ஏற்பாடும் செய்யிறன்"

"ஐயோ... வேண்டாம்... வேண்டாம்... நானே அவரிட்டை சொல்லுறன்", என அவசரப்பட்டு தடுத்தாள் முத்தம்மா.

"ம்... உன்ரை மனம்தான்... சரி ஏதோ நல்லது நடந்தால் சரி", என முடித்தாள் பார்வதி.

அடுத்த மூன்று, நான்கு நாட்களாக முத்தம்மா சுந்தரத்தைத் தனியாகச் சந்திப்பதை இயன்ற வரை தவிர்த்தே வந்தாள். அவள் சுந்தரத்தை திருமணம் செய்வதை உளமார விரும்பினாள். ஆனால் அது அவளை நிரந்தரமாகவே அவர்களிடமிருந்து பிரித்து விடுவதை அவளால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. அதே வேளையில் அவனோ, தானோ போராளியாக மாற வேண்டிய தேவையையும் அவள் உணர்ந்திருந்தாள். ஆனால் இரு குடும்பங்களிலுமுள்ள முதியவர்களின் நிலைமையையும் அவளால் நிராகரிக்க முடியவில்லை.

தனது ஆலோசனைக்கு முத்தம்மா என்ன முடிவு செய்துள்ளாள் என்பதை அறிய சுந்தரத்தின் மனம் தவித்தபோதும் அதற்கான சந்தர்ப்பம் கிட்டாமலே போய்க்கொண்டிருந்தது. அவன் வீட்டில் நிற்கும் நேரம் மிகவும் குறைவாகவே இருந்தது. ஒவ்வொரு நாளும் எட்டு, பத்து வித்துடல்கள் அஞ்சலிக்காக வந்து கொண்டிருந்தன. அஞ்சலி ஏற்பாடுகளைச் செய்வது, வித்துடல் விதைப்பதற்கான பணிகளில் ஈடுபடுவது என அவன் ஓடியாடித் திரியவேண்டியிருந்தது.

இலுப்பைக் கடவை முற்றாகவே இடம்பெயர்ந்துவிட்டது. அவர்களில் மிகக் குறைந்த அளவினர் பாலியாற்றில் தங்கிவிட ஏனையோர் தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், சேவாலங்கா குடியிருப்பு, முழங்காவில் எனப் பல பகுதிகளிலும் பரந்து தங்கியிருந்தனர். தற்காலிகமான கடைகள், மருத்துவமனை, அரச காரியாலயங்கள் என எல்லாமே முழுங்காவிலில் மையம் கொண்டுவிட்டன. இந்த நிலையிலேயே மாவீரர் வணக்க நிகழ்வுகளும் மாவீரர் துயிலும் இல்லமும் போராளிகளின் பிரதான வழங்கல் பகுதிகளும் முழங்காவிலையே பிரதான மையமாக்கிக் கொண்டன. முழங்காவில் ஒரு பரபரப்பான குட்டி நகரம் போன்று மாறிவிட்டது.

• • •

தொடர்ந்து ஒரு வார காலமாகவே பெரியமடுவிலிருந்து விடத்தல்தீவு வரையிலான களமுனை மிகவும் கடுமையாகவே இருந்தது. பள்ளமடு ஒரு சாதகமற்ற இடமாக இருந்தபோதிலும் சிவத்தின் அணி வெகு உக்கிரமாகவே போராடிக் கொண்டிருந்தது. சற்றுத்தூரம் பின் வாங்குவதும் சில மணி நேரத்தில் அந்த இடத்தைப் பிடிப்பதுமாகப் போராளிகள் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது.

விமானத் தாக்குதல், எறிகணைகள் என்பவற்றால் ஏற்படும் இழப்புகளைக் குறைப்பதற்காகவே சில சமயங்களில் பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடும். ஆனால் சிவம் தன் தந்திரோபாயங்கள் மூலமும் போராளிகளின் அர்ப்பணிப்பான பங்களிப்பு மூலமும் சில மணி நேரத்திலேயே பின்வாங்கலை நிமிர்த்தி விடுவான். டாங்கிகள், கவச வாகனங்களால் இராணுவத்தினர் பெரியளவு பயன்பெறமுடியவில்லை. ஆர்.பி.ஜி. அணியும், ஆர்.சி.எல். அணியும் அவற்றை அசைய விடாமல் திணறடித்தன.

மங்களாவின் அணியின் சண்டையும் ஆட்காட்டிவெளிக்கும் சன்னாருக்குமிடையே முன் பின்னாகக் களமுனை அடிக்கடி மாறிக்கொண்டிருந்தது. அங்கும் ஆட்காட்டிவெளி படையினருக்குச் சாதகமாகவும் அமைந்திருந்தது. எனினும் பெண் போராளிகளின் வீரம் செறிந்த போராட்டம், இராணுவத்தைத் திக்குமுக்காட வைத்தது. சிறு காயங்களுக்கு உட்படும் மகளிர் போராளிகள் உடனேயே தமது காயங்களுக்கு கட்டுப்போட்டுவிட்டு தொடர்ந்து போராடி படையினரின் முன்னேற்ற முயற்சியை முறியடித்துக் கொண்டிருந்தனர்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

# அயலகத் தமிழ் இலக்கியம்

- சுரேஷ்

தமிழிலக்கியம் என்பது தமிழ் நாட்டில் மட்டும் படைக்கப்படும் இலக்கியமாக இல்லாமல் உலகம் முழுவதும் உள்ள இலக்கியவாதிகளால், படைப்பாளிகளால் படைக்கப்படுவது. முன்பைவிடத் தற்போது புலம்பெயர் எழுத்தாளர்கள் பல்வேறு நாடுகளிலிருந்தும் தமிழ் இலக்கியத்திற்கு அதிகமாகப் பங்களித்து வருகின்றார்கள். அவர்களின் எழுத்துக்களில் ஒருவகையான சர்வதேசத்தன்மை இயல்பாக இடம் பெற்றிருப்பது தமிழ் மொழிக்கு தேவைப்படும் வரவாகவே சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட புலம்பெயர் எழுத்தாளர்களின் சில சிறந்த படைப்புகளை ஒன்றாக்கி வாசகர்களுக்கு ஒரு சிறப்பான நூலாக 'அயலகத் தமிழ் இலக்கியம்' என்ற பெயரில் தொகுத்தளித்துள்ளார் எழுத்தாளர் சா.கந்தசாமி.

இத்தொகுப்பில் சா.கந்தசாமி அவர்கள் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் எழுத்தாளர்களின் சிறுகதைகளையும், கவிதைகளையும் அளித்துள்ளார். இலங்கையைச் சேர்ந்த பதினாறு படைப்பாளிகளின் சிறுகதைகளும், மலேசியாவைச் சேர்ந்த ஆறு படைப்பாளிகளின் சிறுகதைகளும், சிங்கப்பூரைச் சேர்ந்த ஆறு படைப்பாளிகளின் சிறுகதைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அதேபோல கவிதை வரிசையில் இலங்கை கவிதைகள் பதினாறும், மலேசியக் கவிதைகள் மூன்றும், சிங்கப்பூர் கவிதைகள் இரண்டும் இதில் உள்ளன. இப்படைப்பாளிகளைப் பற்றிய சிறு அறிமுகக் குறிப்புகளையும் இப்புத்தகத்தில் தனியாக பிற்சேர்க்கையாக வைத்திருப்பது வாசகர்களுக்கு அப்படைப்புகளின் மீது மேலும் நெருக்கத்தைக் கொண்டு செல்கிறது. நூலின் பின்னுரையில் இத்தொகுப்பில் உள்ள படைப்புகளை கொடுத்துதவிய உள்ளூர் மற்றும் புலம்பெயர் இலக்கியவாதிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களுக்கு தன் நன்றியைத் தெரிவித்திருக்கிறார் சா.கந்தசாமி.




சிறுகதைகளில் இலங்கை எழுத்தாளர் வ.அ. இராசரத்தினம் அவர்கள் எழுதிய 'தோணி' என்ற சிறுகதை மனதை நெருடுவதாக இருக்கிறது. சொந்தத் தோணியில்லாமல் கடலோடியாக வாழும் தன் தந்தை, தான் கடலில் பிடித்த மீன்களையெல்லாம் தோணியின் சொந்தக்காரனிடம் கொடுத்துவிட்டு வெறும் கூலியை மட்டும் வீட்டுக்குக் கொண்டுவருவதைக் கண்டு மனம் வருந்துகிறான் சிறுவனான மகன். சொந்தத் தோணியை அடைவதையே தன் லட்சியமாக மனதில் கொள்கிறான். பெரியவனாகும் அவன் சொந்தத் தோணியை வைத்திருக்கும் தந்தையை உடைய கனகத்தை திருமணம் செய்ய நினைக்கிறான். அதன் மூலம் தோணி தனக்குச் சொந்தமாகுமென ஆசை கொள்கிறான்.

ஆனால் சில வாரங்களிலேயே கனகத்தின் தந்தை புயலில் சிக்கி இறந்துபோகிறார். தோணியும் கரைக்கு வராமலே போய்விடுகிறது. இந்நிலையில் தோணியில்லாத தன்னைக் கனகம் திருமணம் செய்வதைவிட சொந்தத் தோணியுள்ள வேறொருவரை அவள் திருமணம் செய்தால் அவள் வாழ்வாவது சிறப்பாக அமையும் என அவள்மீது கழிவிரக்கம் கொண்டு அவளை வேறொருவருக்கு மணம் முடித்து வைக்கிறான். தோணி என்பது அவனைப் பொறுத்தவரையில் ஒரு கனவுப் பொருளாகவே இருக்கிறது. காலம் ஒருநாள் மாறுமென நம்பிக்கையுடன் காத்திருக்கிறான். (22ஆம் பக்கம் பார்க்க)






நீ விடை பெற்றுச் சென்ற பின்
ஏன் அழுகிறேன்
பிரிந்து செல்வதற்கான
அத்தனை சாத்தியங்களுடனும்தானே
நீ வந்து சேர்ந்தாய்.
மார்கழிக் குளிரில்
இசைப் பேழையை
ஒலிக்கச் செய்துவிட்டு
நீ கடந்து சென்ற பாதையை
வெறித்துப் பார்க்கிறேன்.
கடைசியாய் சொன்ன ஒற்றை வார்த்தை
உடைந்த கண்ணாடிச் சில்லென
ஒளி வீசுகிறது வாசற்கோலத்தில்.
தொண்டைக்குள் சிக்கியிருக்கும்
பேரழுகையை விழுங்கியபடி - அதை
எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டேன்.
என் இரவுகளில்
அது ஒன்றுதான் பௌர்ணமி.
அது ஒன்றுதான் நட்சத்திரம்.
அது ஒன்றுதான் பனித்துளி.
அது ஒன்றுதான் கனா.

- மனுஷி

# பேயாய் உழலும் சிறுமனம்

- செந்தில் ஜெகநாதன்

சுரேஷ் பிரதீப் எழுதிய 'ஒளிர்நிழல்' நாவலை சமீபத்தில் வாசித்தேன். நாவலின் செறிவான மொழியும், அதனுடைய மீபுனைவு எனப்படும் Meta-fiction வடிவம் மற்றும் சொல்லும் முறை எனப் பல வகைகளில் இந்நாவல் நல்ல வாசிப்பனுபவத்தை தந்தது.

நாவல், மனித மனங்களின் பல்வேறு வண்ணங்கள் வெளிப்படும் தருணங்களைச் சொல்வதாக அமைந்திருக்கிறது. ஏனெனில் மனிதனின் முகம் என்பதும் குணம் என்பதும் மனிதனின் 'மனம்'தான் என்று நினைக்கிறேன். சக்தி, குணா, அருணா, ரகு, இன்னும் சில பாத்திரங்களின் மனத்தத்தளிப்புகள் மற்றும் எண்ண ஓட்டங்களின் மூலம் நாவல் விரிகிறது.

ஒருவனின் பேராசைக்கும், தொடர்ச்சியான கீழ்மைக் குணத்திற்கும் கிடைக்கக்கூடிய ஆகப் பெரும் தண்டனை என்னவாக இருக்க முடியும்? மரணமா? மரணத்திற்கு முன்பே கிடைக்கக் கூடிய அதைவிடவும் பெரும் தண்டனை ஒன்று உண்டு. அது அவனைச் சுற்றி உள்ளவர்களின் புறக்கணிப்பு. ஒருவனைப் புறக்கணிப்பதை விடவும் உயிரோடு இருக்கும் போது கிடைக்கும் தண்டனை வேறெதுவும் இருக்க இயலாது. அப்படியாக பெற்ற தாயும், உடன் பிறந்த சகோதரனுமே ஒருவனைப் புறக்கணித்து அவனை விட்டு விலகிச் செல்கிறார்கள் எனில்




அவன் குணாதிசயம் பற்றி யூகிக்க முடிகிறதா? சக்தி என்னும் கதாபாத்திரம் இந்நாவலில் அப்படி உருவாக்கப்பட்டிருக்கிறது. தாயும், சகோதரனுமே புறக்கணித்து ஒதுங்கிப் போகும்படி ஒருவன் ஏன் ஆனான்? என்பதை நாவல் விவரிப்பதாக நாவலை நினைவில் அசை போடும்போது எண்ணிக் கொண்டேன்.

குணா என்னும் அகத் தத்தளிப்பும், குழப்பமும், குற்றவுணர்வும் கொண்ட இன்னொரு கதாபாத்திரம் அது எதிர்கொள்ளும் அகச்சிக்கல்கள் சிறந்த தருணங்களாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

அருணா என்னும் பெண் கதாபாத்திரம் அதன் மன ஓட்டத்திலும், தன் குறைகளை நியாயப்படுத்த அது முகமூடி அணிந்து கொள்ளும் தருணங்களிலும் அதன் உள்ளம் வெளிப்படுத்துவதை மிகவும் தத்துரூபச் சித்தரிப்பாக தேர்ந்த சொற்களால் விவரித்திருக்கிறார் சுரேஷ்.

உளவியல் சார்ந்த தருணங்களை வலுவான மொழிகொண்டு, நேர்த்தியான நடையில் சொல்வதன் மூலம் வாசகனுக்கு நல்ல உணர்வெழுச்சி ஏற்படுத்துவதாக இருக்கிறது சுரேஷ் பிரதீப்பின் எழுத்து. அது தமிழ் இலக்கியத்துக்கு மேலும் பல அற்புதமான படைப்புகளைத் தரும் என்று நம்பிக்கையோடு அவரின் அடுத்தடுத்த படைப்புகளுக்காக காத்திருக்கிறேன்.

# மரங்களைப் பாதுகாப்பது எத்தனை முக்கியத்துவம்? மரமண்டைகளுக்கு இது தெரியாதது ஏன்?

**பின்பற்றப்படவேண்டிய முன்னுதாரணம்**

அயல் நாட்டில் நடக்கும் சூழல்சார்ந்த போராட்டங்கள் எல்லாம் எமக்கு முன்னுதாரணமானவைகளே. மனித மேம்பாட்டில் அக்கறை கொண்டவாகர் களான சூழலியலாளர்கள் பலவிதமான போராட்டங்கை முன்னெடுத்து வருகின்றனர்.

இங்கும் பனை மர அழிப்புக் எதிராகவும் பலவிதமான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை இருக்கிறது. பனைகளைப் பாதுகாக்கவெனப் பல அரச நிறுவனங்களும், நிர்வாகங்களும் இருந்தும் பனைகள் முறைப்படி பாதுகாக்கப் படவில்லை எனப் பலர் வருத்தம் தெரிவிக்கின்றனர். அண்மையில் தமிழ்நாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டமும் எமக்கு முன்னுதாரணமானதே. ஆனந்த விகடனுக்கு நன்றி




தமிழ்நாட்டிலுள்ள 13 மாவட்டங்களில் கோயம்புத் தூர் மாவட்டத்தில் சூலூர், சுல்தான்பேட்டை, சாலை புதூர், வலசுப்பாளையம், வஞ்சிபுரம், கிருஷ்ணாபுரம், சின்னமநாயக்கன் பாளையம், கரையாம்பாளையம் ஆகிய ஊர்களின் வழியே உயர் மின்கோபுரங்கள் அமைத்து, கேரளா மாநிலம் திருச்சூர் வரை மின்சாரத்தைக் கொண்டு செல்ல ஆயத்தப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் 'பவர்கிரிட்' நிறுவனத்தின் நிலம் கையகப் படுத்துவதற்கான நில அளவைப் பணிகளுக்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெற்றதால் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது தமிழ்நாடு. இத்தகைய சூழ்நிலையில்... தமிழக அரசு கைகட்டி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பதுதான் வேதனையான விஷயம் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கோபுரம் அமையவிருக்கும் சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு முன்னறிவிப்புக் கடிதம் எதுவும் வழங்காமல், அத்துமீறி நிலத்துக்குள் நுழைந்து, நிலங்களை அளந்து அடையாளக் கல் நடுவதாக வருவாய்த்துறை மீது குற்றம் சாட்டுகிறார்கள், விவசாயிகள். இப்பிரச்சினை குறித்து நம்மிடம் பேசினார், கோயம்புத்தூர் மாவட்டம், சின்னமநாயக்கன் பாளையம் கிராமத்தைச் சேர்ந்த ஜெயமணி. "எங்க தென்னந் தோப்புக்குக் கதவு போட்டு பூட்டி வெச்சுருந்தோம். திருடருங்க மாதிரி பூட்டை உடைச்சு எங்க தோட்டத்துக் குள்ள புகுந்து நிலத்தை அளந்தாங்க. "எதுக்குய்யா தோட்டத்துக்குள்ள புகுந்து இப்படி அக்கிரமம் செய்றீங்க"னு கேட்டதுக்குத் "தென்னை மரங்களை வெட்டிட்டு, மின்சாரக் கோபுரங்கள் வைக்கப் போறோம்"னு சொன்னாங்க. "எங்களை வேணும்னாலும் வெட்டிக்கங்க... குழந்தைபோல வளர்த்த தென்னை மரங்களை வெட்டாதீங்க"னு தடுத்ததுக்குப் போலீஸை வெச்சு இழுத்துக் கிட்டுப் போயிட்டாங்க. நிலத்தை அளந்தபிறகுதான் என்னை விட்டாங்க" என்று கதறுகிறார்.

அதே ஊரைச்சேர்ந்த அருண்குமார், சரவணன் ஆகிய இரண்டு விவசாயி களையும் இழுத்துச் சென்று கைகளை முறுக்கி, தென்னை மரத்துடன் சேர்த்துப் பிடித்துக்கொண்டு நில அளவை முடிந்த பிறகுதான் விடுவித்திருக்கின்றனர், காவல்துறையினர்.

"மத்திய அரசுக்குச் சொந்தமான பவர் கிரிட் நிறுவனம், பல மாநிலங்களில் உயர் மின் அழுத்த கோபுரங்களை அமைக்கும் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின் ஓர் அங்கமாக, தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல், திருச்சி, நாமக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய 13 மாவட்டங்களில் 11 மின் வழித்தடங்களை அமைக்கவுள்ளது. இந்த மின் வழித்தடங்கள் பெரும்பாலும் விளைநிலங்கள் வழியாகத்தான் அமைக்கப்படுகிறது. இதனால், ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள், தென்னை மரங்கள் மற்றும் பலவகை மரங்கள் அடியோடு வெட்டிச் சாய்க்கப்படும் சூழல் உருவாகியுள்ளது.

சம்பந்தப்பட்ட நிலத்தின் உரிமையாளரிடம் எந்த விதமான முன்னறிவிப்பும் செய்யாமல் நிலத்தை அளந்து கல் ஊன்றுகிறார்கள். வருவாய்த்துறையின் இந்த அத்துமீறல்களை விவசாயிகள் ஒன்று திரண்டு தடுக்க முயற்சித்தால், காவல்துறை மூலம் விவசாயிகள் அடித்து விரட்டப்படுகிறார்கள். அரசு ஊழியர்களைப் பணிசெய்ய விடாமல் தடுத்ததாக விவசாயிகள் மீது வழக்குத் தொடரப்படுகிறது. மேலும் கைது செய்து சிறையில் அடைப்பது, பொய்வழக்கு போடுவது எனக் கடந்த மூன்று மாதங்களாகத் தமிழக அரசால் அச்சுறுத்தலுக் குள்ளாகி வருகிறார்கள், விவசாயிகள். பல மாற்று வழிகள் இருக்கும்போது விளைநிலத்தில் கொண்டு போக வேண்டிய அவசியம் என்ன என்பதுதான் எங்கள் கேள்வி. மாவட்ட நிர்வாகமும், காவல்துறையும் பவர்கிரிட் நிறுவனத்துக்காகத் தீவிரமாக வேலை செய்கின்றன.

உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் எனப் பல வடிவங்களில் விவசாயிகளின் போராட்டங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. தற்போது, ஈரோடு மாவட்டத்தில் மூலக்கரை, பெருந்துறை, மேட்டுக்கடை ஆகிய பகுதிகளிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் சுல்தான்பேட்டையிலும், திருப்பூர் மாவட்டத்தில் வி.கள்ளிப்பாளையம் பகுதியிலும், நாமக்கல் மாவட்டத்தில் பவானி ரோடு பகுதியிலும், சேலம் மாவட்டத்தில் சங்ககிரி, சேஷ ன்சாவடி ஆகிய ஊர்களிலும், தருமபுரி மாவட்டத்தில் எட்டியாம்பட்டி பகுதியிலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் கிளிப்பட்டுப் பகுதியிலும், வேலூர் மாவட்டத்தில் ஆற்காடு பகுதியிலும் தொடர் காத்திருப்புப் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள், விவசாயிகள். இவர்களுக்குப் பல்வேறு அரசியல் கட்சியினரும் ஆதரவு தெரிவித்து வருகிறார்கள்" என்றார், உயர்மின் கோபுரங்களுக்கு எதிரான விவசாயச் சங்கங்களின் கூட்டியக்க ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ஈசன்.

## அயலகத்....

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

மரதன் ஓட்ட வீரரான தன் தந்தையின் சர்வதேச வெற்றிகள் தரும் புகழையும் அவரின் தோல்விகள் தரும் ஏமாற்றங்களையும் பதின்மூன்று வயது குணாவின் மனதை எப்படியெல்லாம் பாதிக்கிறது என்பதை மலேசிய எழுத்தாளர் மா.சண்முகசிவா தன் 'நடப்பு' பெற்ற சிறுகதையில் இயல்பாகச் சொல்லியிருக்கிறார். தந்தையின் வெற்றி பள்ளியில் அவனை ஒரு ஹீரோவாகவும் அவரின் தோல்வி சகமாணவர்கள் மத்தியில் அவனை ஒரு கேலிப்பொருளாகவும் ஆக்குவதை நடைமுறை யதார்த்தத்துடன் அழகாக இக்கதையில் காட்சிப்படுத்தியுள்ளார் எழுத்தாளர்.


சிங்கப்பூர் எழுத்தாளர் இராம. கண்ணபிரானின் 'நாடோடிகள்' சிறுகதை பகட்டு வாழ்க்கையில் உழலும் தனபாலின் பேராசையையும் அதன் விளைவுகளையும் அவன் நண்பன் பார்த்திபனின் கட்டுப்பாடான, பேராசையற்ற நிதர்சன அணுகுமுறையையும் அதன்பொருட்டு அவன் பெறும் அமைதியான வாழ்க்கையையும் பற்றிப் பேசுகிறது. நடைமுறை வாழ்க்கையை அவரவர் எண்ணப்படி மேற்கொள்வது அவரவர் உரிமை என்றாலும் அதை ஒரு கட்டுப்பாட்டுடனும் முன்யோசனையுடனும் எதிர்கொண்டால்தான் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் என்பதை இச்சிறுகதை சிறப்பாகச் சொல்கிறது.

இத்தொகுப்பிலுள்ள கதைகளின் களங்கள் அயலகக் களமாக இருப்பது வாசகர்களுக்கு வாசிக்கும்போது ஒரு வித்தியாசமான வாசிப்பனுபவத்தை ஏற்படுத்துகிறது. புலம்பெயர் தமிழர்களின் வாழ்க்கைமுறைகள், அவர்களின் பேச்சு வழக்குகள், அவர்கள் வாழும் சூழல்கள் போன்றவற்றை ஒரு தொகுப்பாக அறிந்துகொள்ள இப்புத்தகம் முக்கியமான ஒன்றாக இருக்கிறது.



‘இந்தியன் 2’ படத்தில் கமலுடன் சிம்பு, துல்கர் சல்மன், காஜல் அகர்வால் ஆகியோர் நடிக்கவுள்ளனர்.

இந்தப் படத்தில் தென்கொரிய நடிகையும் பாடகியுமான சூசி பே நடிக்கவுள்ளார். வரும் 18 ஆம் திகதி படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.



பொலிவூட்டின் பிரபல நடிகை தீபிகா படுகோன். பிரபல நடிகர் ரன்வீர் சிங்கை அண்மையில் திருமணம் செய்தார்.

தொடர்ந்து படங்களில் நடிக்கவுள்ள அவர், தன்னைப் பற்றிய செய்திகளை உடனுக்குடன் வெளியிட இணையத்தளம் ஒன்றைத் தொடங்கியுள்ளார்.



தேவ் படத்தில் நடித்து முடித்த கார்த்தி, இப்போது முழுநீள சண்டை, திகில் படத்தில் நடிக்கிறார்.

இந்தப் படத்தில் கதாநாயகி இல்லை. ஏப்ரல் மாதத்தில் படத்தை வெளியிடத் திட்டமிட்டுள்ளனர்.



ரஜினியின் ‘பேட்ட’ படம் வெளியாகியுள்ளது. அடுத்து ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் நடிக்கவுள்ளார். வரும் பெப்ரவரி மாதம் படப்பிடிப்பை தொடங்க திட்டமிட்டுள்ளனர்.

எனினும் படத்தை சன் பிக்சர்ஸா, லைகா நிறுவனமா தயாரிப்பது என்பது இன்னுமும் முடிவாகவில்லை.

அட்லி இயக்கத்தில் விஜய் நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு வரும் 21 ஆம் திகதி தொடங்குகிறது.

விளையாட்டை மையமாகக் கொண்டு உருவாகும் இந்தப் படத்தில் விஜய் பயிற்றுவிப்பாளராக நடிக்கிறார்.







தொலைக்காட்சி தொடர் மூலம் பிரபலமாகி திரைக்கு வந்தவர் பிரியா பவானி சங்கர். விதம்விதமாக போட்டோ எடுப்பதை வழக்கமாக வைத்துள்ள அவர் தற்போது நாவல் ஒன்றை எழுதும் முயற்சியில் இறங்கியுள்ளார். அத்துடன் தொடர்ந்து சினிமாவில் நடிக்கவுள்ளதாகவும் கூறியுள்ளார்.



# நூல் வெளியீடு

இந்தியா சிமென்ட் நிறுவனத்தின் 70 வருடங்கள் பூர்த்தியையும் அதன் நிர்வாக இயக்குநராக 50 வருடங்கள் பூர்த்தியையும் செய்த ஐ.சி.சி. மற்றும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவரான என்.ஸ்ரீனிவாசனின் நூல் வெளியீடு இரண்டு வாரங்களுக்கு முன்னர் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. Defying the Paradigm N Srinivasan: Fifty years of an extraordinary journey என்ற இந்த நூலை தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி வெளியிட டோனி பெற்றுக் கொண்டார்.

இதில் பேசிய முதலமைச்சர் "சர்வதேச கிரிக்கெட்டுக்கு ஸ்ரீனிவாசன் அளித்த பங்களிப்பு குறித்து நாம் பெருமை கொள்ளலாம். குறிப்பாக அவரது பதவிக்காலத்தில் கிரிக்கெட்டில் முதலீடு செய்வதற்கான சூழலை உருவாக்கியதோடு ஏனைய விளையாட்டுகளும் அதுபோன்று செயற்படக் காரணமாக விளங்கியவர்" எனக் குறிப்பிட்டார். இந்த விழாவில் சுனில் கவாஸ்கர், கபில் தேவ், அனில் கும்ளே, ராகுல் டிராவிட், திலீப் வெங்சர்கார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# சுவிற்சர்லாந்து சம்பியன்

அவுஸ்ரேலிய முன்னாள் ரென்னிஸ் வீரரான ஹரி ஹொப்மன் நினைவாக 1989ஆம் ஆண்டு முதல் ஹொப்மன் கிண்ண ரென்னிஸ் தொடர் அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வருகின்றது. எட்டு நாடுகள் பங்குபற்றும் இந்தத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் போட்டி, பெண்கள் ஒற்றையர் போட்டி, கலப்பு இரட்டையர் போட்டி என மூவகைப் போட்டிகள் நடைபெறும். இம்முறை நடைபெற்ற இறுதிப்போட்டியில் சுவிற்சர்லாந்து - ஜேர்மனி அணிகள் விளையாடியிருந்தன.

ஜேர்மனியின் 21 வயதான அலெக்சாண்டர் சுவரொவ் கடந்த நவம்பரில் நடைபெற்ற ஏ.ரி.பி இறுதிச்சுற்றுப் போட்டியில் றோஜர் பெடரரை அரையிறுதிப் போட்டியில் தோற்கடித்திருந்தார். எனவே இந்தத் தொடரில் இருவருக்குமான போட்டி எதிர்பார்ப்பைத் தோற்றுவித்திருந்தது. ஆனாலும் இந்தப் போட்டியில் பெடரர் 6 : 4, 6 : 2 என்று நேர் செற்களில் சுவரொவ்வை தோற்கடித்திருந்தார்.

ஆனாலும் மகளிர் ஒற்றையர் போட்டியில் ஜேர்மனியின் அஞ்சலிக் கேர்பர், சுவிற்சர்லாந்தின் பெலிண்டா பென்சிக்கை வீழ்த்தியதால் வெற்றியைத் தீர்மானிப்பதாக கலப்பு இரட்டையர் போட்டியே காணப்பட்டது. இதில் சுவிற்சர்லாந்து வெற்றி பெற்று ஹொப்மன் கிண்ணத்தை நான்காவது தடவையாகக் கைப்பற்றியது.

# மீண்டும் ஐரோப்பா

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் டோஹாவில் உலக தடகளச் சம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் 2023 ஆம் ஆண்டு உலக தடகளச் சம்பியன்ஷிப் போட்டிகள் ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்ரில் நடைபெறுமென சர்வதேச மெய்வல்லுநர் சங்கங்களின் சம்மேளனம் (IAAF) அறிவித்துள்ளது. கடந்த மாதம் மொனாகோவில் நடைபெற்ற IAAF பேரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டு இங்கிலாந்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்றதன் பிற்பாடு மீண்டும் ஐரோப்பிய நகரம் ஒன்று 6 வருடங்களின் பின்னர் தெரிவு செய்யப்பட்டுள்ளது. புடாபெஸ்ற் நகரில் இதற்கு முன்னதாக 1966, 1998 ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய சம்பியன்ஷிப் போட்டிகளும் 1989, 2004 ஆம் ஆண்டுகளில் உலக உள்ளக சம்பியன்ஷிப் போட்டிகளும் நடைபெற்றாலும் உலக தடகளச் சம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெறவுள்ளமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.






# தரமுயர்வு

கடந்த வருடம் அறிவிக்கப்பட்ட இந்தியக் கிரிக்கெட் அணியின் வீரர்கள் ஒப்பந்தப் பட்டியல் ஏ பிளஸ், ஏ, பி, சி என நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இதில் வருடாந்தம் ஏபிளஸ் வீரர்களுக்கு 7 கோடிகளும் ஏ பிரிவு வீரர்களுக்கு 5 கோடிகளும் பி பிரிவு வீரர்களுக்கு 3 கோடிகளும் சி பிரிவு வீரர்களுக்கு ஒரு கோடியும் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் பிரகாரம் ஏபிளஸ் பிரிவில் விராத் கோலி, றோகித் சர்மா, ஷிகர் தவான், புவனேஸ்வர்குமார், ஜஸ்பிரித் பும்ரா ஆகியோர் உள்ளடக்கப்பட்டிருந்தார்கள். இதில் புஜாரா ஏ பிரிவிலேயே உள்ளடக்கப்பட்டிருந்தார்.

ஆனால் தற்போது நடைபெற்று முடிந்த அவுஸ்ரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் புஜாரா 7 இனிங்ஸ்களில் 3 சதங்கள் அடங்கலாக 521 ஓட்டங்களைக் குவித்து முதல்தடவையாக அவுஸ்ரேலிய மண்ணில் இந்தியா டெஸ்ட் தொடரைக் கைப்பற்றப் பிரதான காரணமாக விளங்கினார். எனவே இதனைக் கருத்திற்கொண்டு புஜாராவையும் ஏபிளஸ் ஒப்பந்தப் பிரிவில் உள்ளடக்குவதற்கு இந்தியக் கிரிக்கெட் சபை நிர்வாகம் தற்போது ஆலோசித்து வருகின்றது.

# ஆசியக் கிண்ணம்

ஆசியக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் 1956ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றன. அந்தவகையில் 17 ஆவது ஆசியக் கிண்ணப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை ஐக்கிய அரபு அமீரகத்தில் ஆரம்பமாகியுள்ளன. 24 அணிகள் பங்குபற்றும் இந்தத் தொடரின் முதற்சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நடைபெற்று இறுதிப்போட்டி பெப்ரவரி முதலாம் திகதி நடைபெறவுள்ளது. அபுதாபி, டுபாய், அல் அயின், சார்ஜா ஆகிய 4 மைதானங்களில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

அபுதாபியின் ஷயட் ஸ்போர்ட்ஸ் சிற்றியில் நடைபெற்ற இப்போட்டியின் ஆரம்பநிகழ்வில் பிபாவின் தலைவரான கியானி இன்பென்ரினோ கலந்து கொண்டுள்ளார். அத்தோடு ஐக்கிய அரபு அமீரகத்தின் பாடகர்களான ஹுசைன் அல் ஜஸ்மி, எய்டா அல் மென்ஹலி, பல்கீஸ் பஃதி ஆகியோரது இசைநிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்தத் தொடரில் நடப்புச் சம்பியனான அவுஸ்ரேலியா, தான் விளையாடிய முதற்போட்டியிலேயே ஜோர்டான் அணியிடம் தோல்வியடைந்து அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆசியக் கிண்ணத் தொடரில் அதிக பட்சமாக ஜப்பான் நான்கு தடவைகள் சம்பியன் பட்டம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# வீடு திரும்பினார்

இரண்டு வாரங்களுக்கு முன்னர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட உதைபந்தாட்ட ஜாம்பவானான ஆர்ஜென்ரீனாவின் டியாகோ மரடோனா உடல் நலம் தேறி கடந்த வாரம் வீடு திரும்பியுள்ளார். வயிற்றின் உட்புறமாக அவருக்கு ஏற்பட்ட இரத்தக் கசிவினாலேயே அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். போதைவஸ்து பாவனைக்கு அடிமையான மரடோனா 2005 ஆம் ஆண்டு வயிற்றில் மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சையின் பின்னர் அவரது எடை பெருமளவு குறைக்கப்பட்டதோடு போதைப் பாவனையில் இருந்து மறுவாழ்வு பெறுவதற்காக சில காலம் கியூபாவிலும் வாழ்ந்து வந்தார்.

இதன் பின்னர் ஆரோக்கியமாகத் திகழ்ந்த மரடோனா தற்போது மெக்சிக்கோவின் டொறடோஸ் டிசினாலோவா அணிக்குத் தலைமைப் பயற்சியாளராக விளங்குகின்றார். கடந்த வருடம் ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளை நேரில் பார்வையிடவும் அவர் வருகை தந்திருந்தார். ஆனாலும் கடந்த சில மாதங்களாக முழங்கால் உபாதையின் காரணமாக ஊன்றுகோலின் உதவியுடன் அவர் நடமாடி வந்தாலும் இந்தப் பருகாலம் முடியும் வரை பயிற்சியாளராக அவர் நீடிப்பார் எனக் கருதப்படுகின்றது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 12.01.2019 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.